## உலர்ந்த எலும்புகளை உயிர்பெறச் செய்த கர்த்தரின் வல்லமை

என்னுடைய இடுப்பு பகுதி மற்றும் முழங்காலில் இரண்டு மேஜர் ஆப்ரேஷன் நடைபெற்றது. இந்த ஆப்ரேஷனுக்காக நான்கரை இலட்சம் வரை செலவு செய்தேன். என்னுடைய நரம்புகளில் ஏற்பட்ட பிரச்சனையினால் என் இடுப்புக்கீழே எந்தவித உணர்வும் இல்லை. அதனால் என்னால் நடக்கவும் முடியாமல் கடந்த 12 வருடங்கள் அதிக வேதனைகளை அனுபவித்தேன்.

**கடந்த 6 மாதத்திற்கு முன் என் தோழியின் வாயிலாக அன்பரின் ஊழிய பத்திரிக்கையை படிக்கும் வாய்ப்பு எனக்கு கிடைத்தது. அந்த பத்திரிக்கையில் இயேசுவின் அன்பைப் பற்றியும், அவருடைய சுகமளிக்கும் வல்லமையைப் பற்றியும் நான் அறிந்துக்கொண்டேன். உடனே அந்த மாதம் திருச்சி அன்பரின் ஊழிய ஜெப ஸ்தலத்தில் நடைபெற்ற அற்புத குடும்ப ஆசீர்வாதக் கூட்டத்திற்கு வந்து, சகோதரரிடம் என் நிலையைச் சொல்லி எனக்காக ஜெபிக்கும்படி கேட்டேன். சகோதரர் அவர்களும் எனக்காக பாரத்துடன் ஜெபித்து அனுப்பினார்கள்.**

**கர்த்தர் எனக்கு இரங்கினார். 12 வருடங்களுக்குப் பிறகு நான் நன்றாக நடக்க தேவையான பெலனை கர்த்தர் எனக்குத் தந்தார். இப்பொழுது திருச்சி கூட்டத்திற்கு நான் பஸ்ஸில் பயணம் செய்து வருவதற்கும் கர்த்தரே உதவி செய்தார். அத்துடன் எனக்கிருந்த மூலம் வியாதியையும் கர்த்தர் நீக்கி நல்ல சுகத்தை கொடுத்தார்.** கர்த்தருக்கு கோடா கோடி ஸ்தோத்திரம்!

- சகோதரி ஜெய்.டீ.






## Rev. Dr. A. ஜாஷ்வா அவர்கள் ஜெபத்தினால் தாம்பரத்தில் நடைபெற்ற உங்கள் விடுதலையின்நாள் கூட்டத்தில் தேவன் செய்த மகத்துவ அற்புதங்கள்

### வேலையைக் கொடுத்து என்னை உயர்த்திய கர்த்தர்!



என் பெயர் பிரபீன். மூன்று வருடத்திற்கு முன் நான் செய்துக்கொண்டிருந்த வேலையிலிருந்து வெளியே வரக்கூடிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டது. அதன்பின் 25 மாதங்களாக வேலையே இல்லை. பல இன்டர்வியு சென்று வந்தேன். வேலை கிடைக்கவில்லை. அந்த நாட்களில் நான் மிகவும் மனம் சோர்ந்து காணப்பட்டேன். குடும்பத்திலும் சில பிரச்சனைகள் இருந்தது. அந்த நேரத்தில் நான் அடிக்கடி Rev.Dr.A.ஜாஷ்வா அவர்களை தொடர்புக்கொண்டு எனக்காக ஜெபிக்கும்படி சொல்வேன். **இக்கட்டான அந்த நாட்களில் பாஸ்டர் எனக்கு சரியான ஆலோசனைகளைக் கொடுப்பார்கள். ஆறுதலான வார்த்தைகளை கூறி என்னை தைரியப் படுத்தினார்கள்.**

ஒரு முறை TGP திருமண மண்டபத்தில் நடைபெற்ற உங்கள் விடுதலையின் நாள் கூட்டத்திற்கு வந்து கண்ணீரோடு ஜெபித்து சென்றேன். பாஸ்டர் அவர்களும் எனக்காக பாரத்தோடு ஜெபித்தார்கள். கண்ணீரைக் கண்ட தேவன் எனக்கு மனமிரங்கினார். நான் சென்னையில் இருந்தேன். **திருவனந்தபுரத்தில் உள்ள ஒரு கம்பெனியின் அலுவலகம் பெங்களூரில் இருந்தது. அந்த அலுவலகத்தின் வேலைகளை நான் சென்னையில் உள்ள என் வீட்டிலிருந்தே செய்யும்படி ஆர்டர் வந்தது. நான் முன்பு வேலை பார்த்ததைவிட பதவியும், சம்பளமும் சற்று குறைவான சம்பளமும்தான். இருப்பினும் நான் சந்தோஷமாக செய்து வந்தேன்.**

அதன்பின் **ஒரு சில நாட்களில் நான் வேலை செய்த கம்பெனியின், பன்னாட்டு கம்பெனி அமெரிக்காவில் இருந்தது. சற்றும் நான் எதிர்பார்க்காமலே அந்த பன்னாட்டு கம்பெனி வேலைகளை நான் என் வீட்டிலிருந்தே செய்யும்படி எனக்கு ஆர்டர் வந்தது. அத்துடன் முன்பு நான் வாங்கிய சம்பளத்தைவிட 5 மடங்கு அதிக சம்பளமும் கிடைத்தது. இந்த அற்புதத்தை செய்த கர்த்தரை மனதார துதிக்கிறேன். ஸ்தோத்தரிக்கிறேன்.** சொந்த சகோதரனைப் போல என்னை உற்சாகப்படுத்தி, வழிநடத்திய பாஸ்டர் அவர்களுக்கும் என் நன்றியை தெரிவிக்கிறேன்.

- சகோ. பிரவீன், கிழக்கு தாம்பரம்.

### மகளுடைய திருமணத்தை நடத்திக் கொடுத்த தேவன்



என் பெயர் பொன்ராணி. நான் அன்பரின் ஊழிய பங்காளர். ஒவ்வொரு மாதமும் அன்பரின் ஊழியத்திற்கான காணிக்கையை தவறாமல் கொடுத்து தாங்கி வருகிறேன். தாம்பரத்தில் நடைபெறுகிற உங்கள் விடுதலையின் நாள் கூட்டத்திற்கும் தொடர்ந்து வந்துக் கொண்டிக்கிறேன். பிள்ளைகளுக்காக ஜெபிக்கும்படி பாஸ்டரிடம் கேட்டுக்கொள்வேன். சமீபத்தில் எங்கள் மகளுக்கு ஏற்ற துணையை கர்த்தர் தந்து, திருமணம் ஆசீர்வாதமாக நடைபெற கர்த்தர் உதவி செய்தார். கர்த்தர் செய்த மகா பெரிய தயவிற்காக என்னுடைய நன்றியை தெரிவிக்கிறேன். - சகோதரி பொன்ராணி, சென்னை.

### அபிஷேகத்தை தந்து சுகம் கொடுத்த தேவன்



தாம்பரத்தில் நடைபெறுகிற உங்கள் விடுதலையின் நாள் கூட்டத்திற்கு நான் தொடர்ந்து உற்சாகமாய் வருகிறேன். ஜெப வேளையில் என்னால் நிற்க முடியாத அளவிற்கு மிகுந்த சரீர பெலவீனத்தோடு காணப்பட்டேன். **ஜெபவேளையில்** Rev.Dr.A.ஜாஷ்வா **அவர்கள் ஜெபிக்கும் பொழுது கர்த்தருடைய ஆவியானவர் என்னை பலமாய் நிரப்பி என்னை பெலப்படுத்தினார். என் பெலவீனங்கள் எல்லாம் மறைந்து போயின. சுகம் கொடுத்த தேவனுக்கு ஸ்தோத்திரம்.**

மேலும் கடந்த முறை தாம்பரத்தில் நடைபெற்ற கூட்டத்திற்கு வந்தப்பொழுது ஊழியத்தின் தேவைகளைக் குறித்து Rev.Dr.A.ஜாஷ்வா அவர்கள் கூறினார்கள். அப்பொழுது நான் இயேசப்பா அடுத்த கூட்டத்திற்கு வரும்பொழுது ஊழியத்தின் தேவைகளுக்குரிய காணிக்கையை நான் கொண்டுவரும்படி எனக்கு உதவி செய்யுங்கள் என ஜெபித்து சென்றேன். அதன்படி இந்த கூட்டத்திற்கு வரும்பொழுது சிறு காணிக்கையை தருவதற்கு கர்த்தர் தயை செய்தார். அவருக்கே மகிமை.

- சகோ. ரிச்சர்ட் பால், பாடி, சென்னை.




# அன்பரின் ஊழியம்

மலர்:9 ◆ ஜனவரி 2023 ◆ இதழ் 1


## உங்கள் ஆசிரியரிடமிருந்து...

அருமையான பங்காளர்கள் அனைவருக்கும் என்னுடைய புத்தாண்டு வாழ்த்துக்களை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்னும் ஓர் ஆண்டை நாம் காண்பதற்கு கர்த்தர் கொடுத்த மகா பெரிய தயவுக்காக ஆண்டவருக்கு நன்றி செலுத்துவோம்.

இந்த புதிய ஆண்டிலும் தேவன் புதிய விதங்களில் உங்கள் அனைவரையும் ஆசீர்வதித்து நடத்துவார். **என் ஜீவனுள்ள நாளெல்லாம் நன்மையும் கிருபையும் என்னைத் தொடரும். சங்கீதம் 23:6**

இந்த வருடம் துவங்கும்பொழுதே உலகத்தில் பொருளாதார மந்தநிலை, பொருளாதார வீழ்ச்சி என சொல்லப்படுகிறது. எங்குப்பார்த்தாலும் சமாதானமின்மை சண்டைகள், கொலைகள், பகைமை, குடும்ப பிரிவுகள், வினோதமான பாவங்கள் அனைத்தும் பெருகி மக்களை சின்னாபின்னமாக்கிக் கொண்டு இருக்கிறது. அது மட்டுமல்ல மக்கள் நூதனமான காரியங்களை பின்பற்றி, அவைகளை தங்களுக்கு பெருமையாகவும், மேன்மையாகவும் எண்ணிக்கொண்டு, அவற்றில் சந்தோஷமடைந்து தங்களை ஒரு அடிமைநிலைக்கு உள்ளாக்கி வாழ்ந்துக் கொண்டிருக்கிறார்கள். **(நியாயாதிபதிகள் 5:8)**

இவை எல்லாவற்றிலிருந்தும் கர்த்தர் தாமே நம்மை பாதுகாத்து வழிநடத்துவார். நம்முடைய ஜீவனுள்ள நாளெல்லாம் கர்த்தருடைய நன்மையும், கிருபையும் நம்மைத் தொடரும். ஜீவனுள்ள நாளெல்லாம் என சொல்லும்பொழுது நீங்கள் பூமியிலே கண் மூடும் நாள் வரையிலும் கர்த்தருடைய கிருபை உங்களை தாங்கும். கர்த்தர் அருளுகின்ற எந்த நன்மைகளும் உங்களுக்கு குறைவுபடாது. ஆகவே சந்தோஷப்பட்டு களிகூறுங்கள்.

**புதிய வருடத்தில் ஊழியத்தில் மேற்கொள்கிற அனைத்து காரியங்களையும் கர்த்தர் ஆசீர்வதிக்கும்படியாக ஜெபியுங்கள்.**

**இந்த வருடம் நாம் செல்லாத ஊர்களுக்குகெல்லாம் சுவிசேஷத்தை எடுத்துச் செல்லும் படியான ஒரு திறந்த வாசலை கர்த்தர் ஏற்படுத்தி தர ஜெபியுங்கள்.**

**அன்பரின் ஊழிய ஜெப ஸ்தலத்தின் பராமரிப்பு பணிகள்,** Painting **வேலைகள் அனைத்தும் முடிப்பதற்கு கர்த்தர் இரங்கி, தேவைகளை சந்திக்கும்படி ஜெபியுங்கள்.**

ஜனவரி மாதம் நடைபெறயிருக்கிற அனைத்து கூட்டங்களுக்காகவும் ஜெபியுங்கள். நீங்கள் இருக்கிற பகுதியில் அற்புத ஆசீர்வாதக்


ஆசிரியர் / வெளியிடுபவர்: **Dr. ஜேன் ஜாஷ்வா**

| சந்தா விபரம் | | | |
|---|---|---|---|
| இந்தியா | : | ஆண்டு சந்தா ரூ.200/-. | ஆயுள் சந்தா ரூ.2,000/-. |
| வெளிநாடு | : | ஆண்டு சந்தா ரூ.1,500/-. | ஆயுள் சந்தா ரூ.15,000/-. |



24 மணி நேர ஜெப உதவிக்கு தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்: 94888 45627
காலை 9.30 மணி முதல் இரவு 7.00 மணிவரை ஜெப உதவிக்கு தொடர்பு கொள்ள வேண்டிய எண்: 80987 42638
**Telugu & Hindi** : 99445 36343, **Malayalam** : 94889 32937, **Kannada** : 90031 17205
e-mail: **info@mojindia.org** website: **www.ministryofjesus.in**
முகவரி:- அன்பரின் ஊழியம், 40, S.P.K. தெரு, உறையூர், திருச்சி - 620 003. Address:- Ministry of Jesus, 40, S.P.K. Street, Woraiyur, Trichy - 620 003.

கூட்டம் நடைபெறும்பொழுது அந்த கூட்டங்களில் தவறாமல் பங்குபெறுங்கள். கூட்டங்களில் கலந்துக் கொண்டு புது வருட ஆசீர்வாதத்தை பெற்றுக் கொள்ளுங்கள். உங்கள் உறவினர்கள், நண்பர்களையும் கூட்டத்திற்கு அழைத்து வாருங்கள்.

**புத்தாண்டு வாக்குத்தத்த செய்திகள் அனைத்தும் Ministry of Jesus You Tube சேனலில் வெளி வரும். சமூக வளை தலங்கள் வாயிலாக வெளி வருகிற பாடல், அனுதின அற்புதம் மற்றும் புதிய நிகழ்ச்சிகளை பாருங்கள்.** அனுதின அற்புதம் இன்னும் புதிய மொழிகளில் வெளிவர ஜெபியுங்கள். ஸ்டுடியோ பணிகளை நன்கு செய்யக்கூடிய பிள்ளைகள் உங்கள் குடும்பங் களில் இருந்தால் அன்பரின் ஊழியத்திற்கு அனுப்பி வையுங்கள்.

**ஊழியத்தின் தேவைகள் மாதந்தோறும் அதிகரித்துக்கொண்டே வருகிறது. பத்திரிக்கை ஊழியம், டி.வி. ஊழியம் மற்றும் சுவிசேஷ கூட்டங்களை நடத்துவதற்கான தேவைகள் சந்திக்கப்பட ஜெபியுங்கள். மறவாமல் தாங்குங்கள். எங்களது** Website **வாயிலாகவும்** (Online Payment) **காணிக்கை அனுப்பலாம்.**

**இம்மாத வாக்குத்தத்தம்**

சங்கீதம் 23:6

எரேமியா 31:14b

சகரியா 9:12b

சங்கீதம் 85:12

S.J.Saves Trust-ல் உள்ள பிள்ளை களுக்காக ஜெபியுங்கள்.

S.J.S.T.மருத்துவமனைக் காக விசேஷமாக ஜெபியுங்கள். மருத்துவ மனையைக் குறித்து கர்த்தர் கொடுத்திருக்கிற தரிசனம் நிறைவேறவும் ஜெபியுங்கள். தாங்குங்கள்.

எங்கள் அப்பா, அம்மாவின் நல்ல சுகத்திற் காகவும், அவர்களுடைய நல்ல ஆரோக்கியத்திற் காகவும் ஜெபியுங்கள். எங்கள் அனைவருக் காகவும் ஜெபியுங்கள். ஊழியத்தில் உங்களுடைய ஜெபம் எங்களை அதிகமாக தாங்கும்.

கர்த்தர் உங்களை ஆசீர்வதித்து காப்பாராக!

கிறிஸ்துவின் பணியில்

**Dr. ஜேன் ஜாஷ்வா**



ஊழியத்திற்கு காணிக்கை அனுப்புகிறவர்கள் கீழ்க்காணும் மூன்று வங்கிக் கணக்குகளில் அனுப்பலாம்

| Dr. ANANDA STIRA | ANBARIN OOZHIYAM | MINISTRY OF JESUS |
|---|---|---|
| Account No. | Account No. | Account No. |
| 10848469699 | 10848559426 | 10848474869 |

**State Bank of India, Cantonment, Trichy Main Branch**
**IFS Code : SBIN 0000930**

**மேற்கண்ட வங்கியின் மூலமாக நீங்கள் காணிக்கை அனுப்பிய உடன் எங்களது Cell No : 95004 87061 என்ற எண்ணிற்கு காணிக்கை அனுப்பிய விவரத்தை கூறலாம். அல்லது SMS மூலம் தெரிவிக்கலாம்.**

**உங்கள் காணிக்கைகளை அனுப்ப மேலும் ஒரு எளிய வழி**

← இந்த QR Code - ஐ உங்கள் செல்போனில் ஸ்கேன் செய்து அல்லது Cell No : 95004 87061 என்ற எண் மூலமும் அனைத்து பணப்பரிமாற்றம் செய்யும் செயலிகள் (Google pay, Paytm, PhonePe etc.,) மூலமாகவும் எங்கள் மேற்கண்ட வங்கிக் கணக்குகளுக்கு காணிக்கை அனுப்பலாம்.

**எமது You Tube சேனல்களை Subscribe செய்யவும்**



Ministry of Jesus - Dr. Ananda Stira



Dr Jane Joshua

My Deliverance Church

**எமது முகநூல் பக்கங்கள் (Face book)**

Ministry of Jesus (Anbarin Oozhiyam) @ministryofjesus.in

Ananda Stira @dranandastira

Margretstira

Jane Joshua @DrJaneJoshua

My Deliverance Church @mydeliverance.church

Rev.Dr.A. Joshua @RevDrAJoshua

Ministry of Jesus
dr. janejosh
jonathanmosesrajstira

ministryofjesus.in

drjane15

**கன்னியாகுமரி மற்றும் சென்னை பகுதியிலுள்ள அன்பரின் ஊழியப் பங்காளர்கள் கவனத்திற்கு**

நமது அன்பரின் ஊழியப் பிரதிநிதிகளாக கீழ்க்கண்டவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள் எனவே உங்கள் ஜெப வேண்டுதல்களை அவர்களிடம் கூறி ஜெபித்துக் கொள்ளலாம். மேலும், நமது ஊழிய விபரங்களையும் அவர்களிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்.

**கன்னியாகுமரி : 82203 17472**
**சென்னை : 77081 53666**



# தடைகளை நீக்கி எப்பொழுதும் எல்லாவற்றிலும் வெற்றி சிறக்க செய்யும் ராஜாதி ராஜா இயேசு

**லூக்கா 2:13 & 2 கொரிந்தியர் 2:14**

புத்தாண்டு வாக்குத்தத்தச்செய்தி : **Dr. ஆனந்த ஸ்திரா**

நமது ராஜாதி ராஜாவும் கர்த்தாதி கர்த்தாவுமாகிய சர்வவல்லமையுள்ள என்றென்றும் பூமியில் அரசாளுகிற தேவனுடைய பரிசுத்த நாமத்தில் உங்கள் அனைவருக்கும் எங்கள் உளமார்ந்த புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம். கர்த்தராகிய இயேசுவை விசுவாசிக்கிற நீங்கள் அனைவரும் எப்பொழுதும் கிறிஸ்துவுக்குள் வெற்றி சிறக்க நான் ஜெபிக்கிறேன். **(யூதா 24,25) (1தெச. 5:23,24)**

அன்பான தேவ ஜனமே! உங்கள் வாழ்க்கையில் வரும் சோதனை எல்லாவற்றிலும் ஜெய கிறிஸ்து முன்சென்று மகத்தான வெற்றியை இந்த ஆண்டு தருவார். வலுவாதபடி உங்களை பாதுகாப்பார். கர்த்தரின் துணையோடு நீங்கள் பிசாசை ஜெயித்து, ஜெயமுள்ள வாழ்க்கை வாழ வேண்டும் என்று கர்த்தர் விரும்புகிறார். **எபிரெயர் 7:25**-ன்படி கர்த்தர் தாமே உங்களை முற்றும் முடிய இரட்சிக்க வல்லவராயிருக்கிறார். இயேசுகிறிஸ்து தாமே தம்முடைய இரத்தம் தோய்ந்த கரத்தினால் உங்களை கரம்பிடித்து பாதுகாத்து வெற்றியுடன் வழி நடத்துவார்!. ஆகவே சந்தோஷமாயிருங்கள். நம் வாழ்க்கையில் வருகிற தடைகள் நீங்கி நாம் எப்படி வெற்றியோடு வாழ முடியும் என்பதை தொடர்ந்து இந்த செய்தியின் வாயிலாக தியானிப்போம்.

## 1. தனிப்பட்ட ஆவிக்குரிய உலக பிரகாரமான வாழ்க்கையில் உள்ள சகல தடைகளையும் நீக்கி வெற்றி வாழ்க்கையைத் தருவார்

தனி மனித வாழ்வில் உள்ள பலவித தடைகள் நீங்கும் பொழுது அந்த மனிதன் வெற்றியின் பாதையில் முன்னேறுகிறான். தாவீது சிறு வயதிலேயே கர்த்தரால் அபிஷேகம் பண்ணப்பட்டவன், பராக்கிரமசாலி, யுத்தவீரன், காரிய சமர்த்தன், சௌந்தரியமுள்ளவன், பாடல் பாடுபவன், வீணை வாசிப்பதில் தேர்ச்சி பெற்றவன், சிங்கத்தையும், கரடியையும், கோலியாத் என்னும் இராட்சஷனை மற்றும் அவனிலும் பலத்த எதிராளிகளை சேனைகளின் கர்த்தருடைய நாமத்தில் தோற்கடித்தவன், மகத்தான வெற்றியை கண்டவன். எனினும், சில சமயங்களில் தாவீது அரசனை போல சாத்தானால் சோதிக்கப்பட்டு, வஞ்சிக்கப்பட்டு துணிகரமான பாவங்களிலும், கர்த்தருக்கு வேதனை உண்டாக்கும் வழிகளிலும் விழுந்தாலும் மீண்டும் கர்த்தரிடமாய் திரும்பி வந்து தன்னை தாழ்த்துகிறான்.

**சங்கீதம் 119:97-ன்** படி இரவும், பகலும் வேதத்தை தியானித்து அதை நேசித்தவன். அவருடைய கற்பனைகளில் மகிழ்ச்சியாக இருந்தவன் **(சங்கீதம் 119:14, 47, 70, 77, 92, 111, 140, 143, 174)** தேவனுக்கு பயந்தவன். ஆடுகளை மேய்த்தவனை கர்த்தர் மிகப்பெரிய ராஜாவாக உயர்த்தினார். புகழும், மதிப்பும், செல்வாக்கும் வெற்றியின் மேல் வெற்றி அவனை தேடி வந்தது. எனினும், அவன் கர்த்தருடைய துணையை தேடாமல் இருந்தப்பொழுது, மாம்ச பெலவீனம் அவனை மேற்கொண்டது. துணிகர பாவத்தினிமித்தம் கொலை செய்தான். **(2 சாமுவேல் 24)** அதன் வாயிலாக தேவ கோபாக்கினையும் தண்டனையை அனுபவித்தான். மிகவும் புகழ்பெற்று விளங்கிய பெரிய ராஜா தன்னுடைய அரச மேன்மையை இழந்து நாட்டை விட்டே ஓடி, தூசியை தன் தலையில் அள்ளிப்போட்டு வெறும் காலால் மகா சத்தமிட்டு அழுத பொழுது தன் குமாரனால் விரட்டப்பட்டான். **(2 சாமுவேல் 15:3)**

ஆம் எனக்கன்பானவர்களே! யானைக்கும் அடி சறுக்கும் என்று கூறுவார்கள். எனவே ஒவ்வொரு நாள் காலையிலும் எழுந்தவுடன் கர்த்தருடைய சமூகத்தில் கர்த்தாவே நான் மிகவும் பெலவீன

மானவன். என்னால் சோதனைகளை மேற்கொள்ள முடியாது, நீர் தான் மேற்கொள்ளவேண்டும் என்று கண்ணீரோடு ஜெபிக்கும் பொழுது அவர் உங்களை வெற்றியின் பாதையில் நடத்துவார். **இயேசுவானவர் வேத வார்த்தையால் சாத்தானை ஜெயித்தார் (மத்தேயு 4:12)** அதேபோல அதிகாலையில் எழுந்து அதிக நேரம் வேதத்தை தியானித்து ஒரு நாளைக்கு மூன்று வேளை தானியேலை போல ஜெபிக்கும் பொழுது அல்லது கர்த்தராகிய இயேசுவை போல தனி இடத்திற்கு சென்று அறையை பூட்டிக் கொண்டு அவர் சமூகத்தில் கண்ணீர் வடிக்கும் பொழுது இப்படிப் பட்ட பாவ சோதனைகள், தடைகள் நம்மை மேற்கொள்ளவிடாமல் வெற்றி வாழ்க்கை வாழ வைப்பார்.

## 2. குடும்ப வாழ்வில் உள்ள தடைகளை நீக்கி, ஆச்சரியமான வெற்றி வாழ்வைத் தருவார்

**கிறிஸ்துவுக்குள் எப்பொழுதும் எங்களை வெற்றிச் சிறக்க பண்ணி, எல்லா இடங்களிலேயும் எங்களைக் கொண்டு அவரை அறிகிற அறிவின் வாசனையை வெளிப்படுத்துகிற தேவனுக்கு ஸ்தோத்திரம். (2 கொரி. 2:14)**

இந்த நவநாகரீக உலகத்தில் நாம் நம்முடைய குடும்பங்களுக்காக ஜெபிக்கும் நேரம், கவனம் செலுத்தும் நேரம் வேலை பளுவின் நிமித்தம் குறைந்து விடுகிறது. நான் சிறு வயதாக இருக்கும் பொழுது கிறிஸ்தவ கிராமங்களில் நான் கேட்ட அதிகாலை ஜெபங்கள், ஸ்தோத்திரங்கள், ஆலய வழிபாடுகள் இவற்றை எல்லாம் இப்பொழுது கேட்க முடிய வில்லை. தகப்பன் ஒரு பக்கம், தாய் ஒரு பக்கம் என்று காலையில் எழுந்து தங்களை ஆயத்தப்படுத்திக் கொண்டு வேலைக்கு சென்று விடுகிறார்கள். வேலை வேலை என்று ஓடுகின்றார்கள். இதன் நிமித்தம் அவர்கள் குழந்தைகளை சரியான விதத்தில் கவனிக்க முடியாமல், நடத்த முடியாமல் போகிறது. இதனால் அநேக குடும்பத்திலுள்ள குழந்தைகள் அந்த குடும்பத்தின் வெற்றிக்கு தடையாக இருக்கிறார்கள். அல்லது மனந்திரும்பாமல் சுகபோகமாக இருக்கும் கணவரால் தடை உண்டாகிறது. வேண்டாத உறவுகளால் தடை ஏற்படலாம், பிள்ளைகள் ஆளுக் கொரு பக்கம் தங்கள் மனம்போல நடக்கும்பொழுது குடும்பத்தின் சமாதானம் கெட்டுப் போகின்றது. எவ்வளவு சம்பாதித்தாலும் நிம்மதியற்ற வாழ்க்கையை நடத்துகிறார்கள். தோல்வியே அவர்கள் குடும்பத்தில் ஏற்படுகிறது. எனினும், இந்த ஆண்டு கர்த்தர் அந்த தடைகளை எல்லாம் நீக்கி உங்கள் குடும்பத்தில் சமாதானத்தையும், சந்தோஷத்தையும், வெற்றியின் வாழ்க்கையையும் தருவார்.

**ஒரு முறை நான் கூட்டத்திற்கு சென்றிருந்தப் பொழுது, கூட்டம் முடிந்ததும் தனி ஜெபத்திற்கு மக்கள் காத்திருந்தார்கள். ஒரு தாய் தனது மூன்று பிள்ளைகளுடன் வந்திருந்தார். அதில் கடைசி பிள்ளை என்னை பார்த்ததும் சத்தமிட்டு அழுதாள். தாத்தா எங்கள் வீட்டில் சமாதானமே இல்லை. அம்மா எப்போதும் அழுது கொண்டே இருப்பார்கள். எனது இரண்டு அண்ணனும் சினிமா பார்ப்பார்கள், நண்பர்களோடு ஊர் சுற்றுவார்கள். எப்போது பார்த்தாலும் சமூக வலைதளங்களில் மூழ்கி இருப்பார்கள். சரியாக படிக்க மாட்டார்கள். பள்ளி, கல்லூரிக்கு போக மாட்டார்கள். என்னை அடித்துக் கொண்டே இருப்பார்கள். என் அப்பா ஒரு மாதத்திற்கு இரண்டு லட்சம் சம்பாதித்தும் வீட்டில் ஒன்றுமே இருக்காது. வீட்டில் கடன் மேல் கடன் தான். அப்பாவும் நண்பர் களோடு ஊர் சுற்றுவார், குடித்துவிட்டு வருவார். இதனால் வீட்டில் இருக்க எனக்கு பிடிக்கவில்லை. இயேசு என்னை சீக்கிரம் பரலோகத்திற்கு எடுத்துக் கொள்ள ஜெபியுங்கள் என்று கதறினாள். அவளுடன் சேர்ந்து தாயும் அழுதார்கள். வீட்டிற்கு வரும்படி வருந்தி அழைத்தார்கள். எனவே அவர்கள் வீட்டிற்கு சென்றேன்.**

**அவர்கள் வீடு மிகவும் பெரியதாக இருந்தது. ஆனால் அலங்கோலமாய், குப்பை மேடு போல காட்சியளித்தது. இருள் நிறைந்து காணப்பட்டது. நான் சென்றிருந்தப் பொழுது குடும்பத்தில் அனைவருமே இருந்தார்கள். நான் அவர்களை திட்டவில்லை, சபிக்கவில்லை, கடிந்து கொள்ளவில்லை. அதற்கு மாறாக அவர்களை அருகில் உட்கார வைத்து ஒரே ஒரு கேள்வி கேட்டேன். அன்பு மக்களே! இன்று காலையில் தேவனோடு எவ்வளவு நேரம் செலவழித்தீர்கள் என்று கேட்டேன். அவர்களால் எந்த பதிலும் சொல்ல முடியவில்லை. அப்பொழுது நான் "ஐந்து நிமிடம் தேவனோடு உறவாடி பாருங்கள், 10 நிமிடம், அரை மணி நேரம், 1 மணி நேரம், நான்கு மணி நேரம் என்று அவர் சமூகத்தை தேடுங்கள். வேதத்தை சத்தமாய் வாசியுங்கள். ஒவ்வொருவரும் தனித்தனியாக ஜெபியுங்கள்! அப்பொழுது எல்லாம் சரியாகிவிடும்" என்று கூறினேன். முதலாவது தங்கள் வீட்டின் தோல்வியினால் இரண்டு அண்ணன்மார்களும் இந்த வழி சுலபமான காரியம் என ஒப்புக் கொண்டார்கள். அப்பொழுது நான் ஏசாயா 48:18-ன்படி "கண்டிப்பாய் சமாதானம் உங்கள் வீட்டில் நதியை போல இருக்கும்"**

**என்றேன். அப்படியே அவர்களும் அடுத்த நாளிலிருந்து தனித்தனியாக முழங்காலில் நின்று தேவனை ஸ்தோத்தரித்து, வேதத்தை வாசித்து ஜெபிக்க ஆரம்பித்தார்கள்.**

என்ன ஆச்சரியம்! சத்திய வேதம் அவர்களை முற்றிலும் மாற்றியது. அவர்கள் பழக்கவழக்கங்களை முற்றிலும் மாறியது. வீட்டில் சண்டை இல்லை, மிகுந்த சமாதானம் உண்டானது. **(ரோமர் 16:20)** கடன் பாரம் அனைத்தும் நீங்கியது. குடும்ப தலைவர் இழந்து போக வேண்டிய ஒரு பதவி உயர்வு அவருக்கே கிடைத்தது. இன்று குடும்பமே கர்த்தருக்கு சாட்சியாக இருக்கிறது.

ஆம் பிரியமானவர்களே! **"ஆதியிலே வார்த்தை இருந்தது, அந்த வார்த்தை தேவனிடத்திலிருந்தது, அந்த வார்த்தை தேவனாயிருந்தது" (யோவான் 1:1) அந்த வார்த்தை மனுஷருக்கு இருளில் பிரகாசிக்கிற ஒளியாக இருந்தது.** பரிசுத்த வேதாகமத்தை அதிகமாக நேசிப்போம். அப்பொழுது நம்முடைய வாழ்க்கையில் இருக்கிற தடைகள் அனைத்தும் நீக்கப்படும். வெற்றி உள்ள வாழ்க்கை வாழ வேதம் காட்டும் வழியில் நடப்போம். **(உபாகமம் 28: 1- 14)**

## 3. சமுதாய வாழ்க்கையில் உங்கள் தடைகளை கர்த்தர் நீக்கி உங்கள் பெயரை பெருமைப்படுத்துவார்.

எந்த ஒரு தனிமனிதனும் சமுதாயத்தில் நல்ல அந்தஸ்தைப் பெற்று சம்பூரணமாய் வாழவே விரும்புகிறான். நீங்கள் தானியேலைப் போல, யோசேப்பை போல ஒரு உயர்ந்த நிலைக்கு வருவதற்கு பல தடைகள் இருக்கலாம். கர்த்தர் அந்த தடைகள் அனைத்தையும் உங்களுக்காக நீக்கி, நீங்கள் வெற்றி பெற உதவி செய்வார். உங்கள் பெயரை பெருமைப் படுத்தி, உயர்ந்த இடத்தில் வைத்து உங்களுக்கும், உங்கள் மூலமாக சமுதாயத்திற்கும் பெரிய வெற்றியை கர்த்தர் தருவார். நீங்கள் ஜீவனுள்ள நாளெல்லாம் கர்த்தருடைய நாம மகிமைக்காக சாட்சியாக வாழ்வீர்கள்.

**வங்காரி மாத்தாய் (Wangari Maathai) என்னும் பெண்மணியைக் குறித்து உங்களுக்கு எழுதுகிறேன். வங்காரி சாதாரண ஒரு குடும்பத்தில் பிறந்தவர். இவர் கென்யாவில் நையேரி மாவட்டத்தில் உள்ள இகிதி என்னும் சிற்றூரில் 1940ம் ஆண்டு பிறந்தார். சிறு வயதிலிருந்தே விறகு பொறுக்க காடுகளுக்கு செல்வது, தண்ணீர் எடுக்க மலைகளுக்கு சென்று வருவது போன்ற கடினமான வேலைகளை தன் தாயாருடன் சேர்ந்து செய்வார். இவர் வசிக்கும் கிராமத்தில் பள்ளிக்கூடம் கிடையாது என்றாலும் வெகுதூரம் நடந்து சென்று கல்வி பயின்றார். படிப்பில் சிறந்து விளங்கினார். அமெரிக்கா சென்று 1964ல் இளங்கலை படிப்பையும், 1966ல் முதுகலை படிப்பையும் முடித்தார். 1971ம் ஆண்டு கென்யாவில் முதன் முதலில் டாக்டர் பட்டம் பெற்ற பெண்மணி இவர்தான். நைரோபிப் பல்கலைக் கழகத்தில் முதல் பெண் பேராசிரியர் என்னும் மதிப்பை பெற்றார். பெண்களின் முன்னேற்றத்திற் காகவும் வளர்ச்சிக்காகவும் அதிகமாக பாடுபட்டு, அவர்களுக்காக புதிய புதிய சட்டங்களை உருவாக்கினார். "மாற்றத்திற்கான பெண்கள்" என்னும் ஓர் அமைப்பைத் தொடங்கினார்.**

**தினந்தோறும் காலையில் எழுந்து, கர்த்தரை துதித்து, வேதம் வாசித்த பிறகுதான் தன்னுடைய வேலைகளை ஆரம்பிப்பார். 1977-ல் தம்முடைய பேராசிரியர் பணியைத் துறந்தார். உலகச் சுற்றுச்சூழல் நாளன்று தன் வீட்டு தோட்டத்தில் ஒன்பது செடிகளை வளர்க்கும் பணியில் ஈடுபட்டார். பசுமைப் படை என்ற இயக்கத்தை ஆரம்பித்தார். இவ்வியக்கத்தின் நோக்கம் என்னவென்றால், காடுகளை அழிப்பதினால் மக்களுக்கு ஏற்படுகின்ற வறுமையை நீக்கி, ஆப்பிரிக்க காடுகளை மீண்டும் உருவாக்குவதே!**

**30 ஆண்டுகளில் மூன்று கோடி மரங்களை வளர்க்க ஏழைப் பெண்களைத் திரட்டினார். இவற்றோடு மக்கள் கல்வி, குடும்பக் கட்டுப்பாடு, ஊட்டச்சத்து, ஊழல் எதிர்ப்பு ஆகியவற்றிலும் பசுமை படை அமைப்பு ஈடுபட்டது. 1980ல் பெண்களுக்கான தேசிய கவுன்சிலிங் தலைமைப் பொறுப்பை ஏற்றார். பின்னர் ஜனநாயக ஆதரவு இயக்கத்தின் தலைவர்களில் ஒருவரானார். இவருடைய இந்த செயலானது 12க்கும் மேற்பட்ட நாடுகளுக்கு பரவினது. இவருக்கு உலக நாடுகள் கொடுத்த பெயர் "மரங்களின் தாய்" என்பதே.**

**தேவனுடைய அளவற்ற கிருபையினாலும், தன்னுடைய விடாமுயற்சியினாலும் என்பதினாயிரம் பெண்களின் குடும்பம் நேரடியாக பயன் பெற்றது. இவர் 2002ஆம் ஆண்டில் நாடாளுமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டார். 2003ம் ஆண்டில் அமைந்த கூட்டணி ஆட்சியில் இணை அமைச்சராக பதவியேற்று இவருக்கு பிடித்தமான சுற்றுச் சூழல் மற்றும் இயற்கை வளங்கள் பாதுகாப்புத் துறையை கவனித்துக்கொள்ளும் பணியை மேற்கொண்டார். சிறுவயதில் இருந்து மிகவும் கஷ்டப்பட்டு தான் நன்றாக வாழ முடியுமா? என்ற சந்தேகத்தில் இருந்த இந்த ஏழை பெண்மணியை சர்வ வல்லமையுள்ள தேவன் ஆச்சரியமாக உயர்த்தினார். அதுமட்டுமல்ல,**

2004ம் ஆண்டு பெண்கள் வளர்ச்சி மற்றும அமைதிப் பணிகளுக்கான நோபல் பரிசை பெற்றார். அமைதிப்பணிகளுக்காக நோபல் பரிசை பெற்ற முதல் ஆப்ரிக்க பெண் என்னும் பெருமையும் இவருக்கு உண்டு (இந்திய ரூபாயின்படி இப்பரிசின் மதிப்பு 6.8 கோடியாகும்). என்ன ஆச்சரியம்!

ஏழ்மை நிலையிலிருந்த ஒரு கிராமத்து பெண்ணை தேவன் இவ்விதமாய் உயர்த்துவாரென்றால் தமது நாமத்தினிமித்தம் உங்களையும் உயர்த்துவார். அநேக ஜனங்களுக்கு பிரயோஜனமாக வைப்பார்.

ஆம் பிரியமானவர்களே! தானியேல், சாத்ராக், மேஷாக், ஆபேத் மெகோ போல உங்களுக்கு எவ்விதமான துன்பங்கள், எதிர்ப்புகள் வந்தாலும் நாம் ஒரே ஒரு மெய் தேவனை ஆராதித்து, அவரை ஸ்தோத்தரியுங்கள். (தானியேல் 6:10) அப்பொழுது உங்களுக்கு எதிராக வருகிற காரியங்களையும், அல்லது ஏழு மடங்கு சூடாக்கப்பட்ட அக்கினி சூளையாக இருந்தாலும், சிங்கக் கெபியாக இருந்தாலும், கொலைக்களமாக இருந்தாலும் அது உங்களை ஒன்றும் செய்யாது. கர்த்தர் தம்முடைய தூதனை அனுப்புவார். இல்லையேல் அவர் தாமே அவற்றின் மத்தியில் காட்சியளித்து நம்மை விடுவிப்பார். நம்முடைய வாழ்க்கை ஜெயமுள்ள வாழ்க்கையாக மாறும். (தானியேல் 3:28,29)

- ராஜாவாகிய தரியு தேசமெங்கும் குடியிருக்கிற எல்லா ஜனங்களுக்கும் ஜாதியாருக்கும் பாஷைக்காரருக்கும் எழுதினது என்னவென்றால்: உங்களுக்குச் சமாதானம் பெருகக்கடவது.
- என் ராஜ்யத்தின் ஆளுகைக்குள் எங்குமுள்ளவர்கள் யாவரும் தானியேலின் தேவனுக்கு முன்பாக நடுங்கிப் பயப்படவேண்டுமென்று என்னாலே தீர்மானம் பண்ணப்படுகிறது. அவர் ஜீவனுள்ள தேவன், அவர் என்றென்றைக்கும் நிலைத்திருக்கிறவர்: அவருடைய ராஜ்யம் அழியாதது, அவருடைய கர்த்தத்துவம் முடிவுபரியந்தமும் நிற்கும்.
- தானியேலைச் சிங்கங்களின் கைக்குத் தப்புவித்த அவரே தப்புவிக்கிறவரும் இரட்சிக்கிறவரும், வானத்திலும் பூமியிலும் அடையாளங்களையும் அற்புதங்களையும் செய்கிறவருமாயிருக்கிறார் என்று எழுதினான்.
- தரியுவின் ராஜ்யபார காலத்திலும், பெர்சியனாகிய கோரேசுடைய ராஜ்யபார காலத்திலும் தானியேலின் காரியம் ஜெயமாயிருந்தது. (தானியேல் 6:25-28)

இந்த ஆண்டில் விசேஷமாக நமது ஜெப வாழ்க்கையை அதிகப்படுத்தி உலக காரியங்களையே முக்கியப்படுத்துவதை விட்டு விடுவோமாக! அப்போது நிச்சயம் நமக்கு மகத்தான வெற்றியுண்டு. நம் பகைவர்களும் தேவனுடைய மகத்துவ செயல்களை அறிந்து கொள்வார்கள்.

## 4. உங்கள் ஊழியத்தில் இருக்கும் தடைகளை கர்த்தர் நீக்கி, ஊழியங்கள் வளரும்படி வெற்றியின் பாதையில் நடத்துவார்.

*இந்த கடைசி காலத்தில் உலகெங்கும் உள்ள ஊழியங்கள் வளர்ச்சி அடையாதபடி பல தடைகள் இருப்பதை பார்க்கிறோம்.* ஊழியத்தின் வெற்றிக்கு உள்ள தடைகளை கர்த்தர் தாமே நீக்கி உலக மெங்கும் உங்களை ஒளி வீசச் செய்வார்.

17-ஆம் நூற்றாண்டில் அடிமை வியாபாரம் அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளில் அதிகமாக இருந்தது. கருப்பின மக்களை வெள்ளைக்காரர்கள் அடிமைகளாக விலைக்கு வாங்கினார்கள். கொடுமையான கூலி வேலைக்கும், குறைந்த சம்பளத்திற்கும் அடிமைகள் அமர்த்தப்பட்டார்கள். அவர்களை விலைக்கு வாங்கின முதலாளிகள் அடிமைகளை என்ன வேண்டும் ஆனாலும் செய்வார்கள், பலவிதங்களில் சித்ரவதை செய்வார்கள், சாட்டையால் அடித்து, சூடு வைப்பார்கள். இன்னும் வெளியில் சொல்ல முடியாத கொடுமைகளை செய்தார்கள். அது ஒரு கொடுமையான காலமாய் இருந்தது.

ரிச்சர்டு ஆலன் என்னும் கருப்பின ஆப்பிரிக்க அடிமையை ஒரு வெள்ளைகார முதலாளி வாங்கினார். அந்த காலக்கட்டத்தில் அப்பகுதியில் ஒரு வெள்ளைக்கார மிஷனரி ஒருவர் பரிசுத்த வேதாகமத்தை ஆலனிடம் காண்பித்து இயேசுவின் சரித்திரத்தை கூறினார். சத்துருக்களை நேசிக்க சொன்னார். இஸ்ரவேல் ஜனங்களை எகிப்தி லிருந்து விடுவித்தது போல உன்னை வாங்கின முதலாளியும் உன்னை விடுவிப்பார். நீ அநேகருக்கு பிரசங்கியாக மாறுவாய் என்று கூறினார். அதுமாத்திரமல்ல, தன்னை கொடுமையாக வேலை வாங்குகிற முதலாளியை மன்னித்து அவர் இரட்சிக்கப்பட ஜெபி என்று சொன்னார். அதன்படி ஆலன் தனது முதலாளி இரட்சிக்கப்பட ஜெபித்தார். சில நாட்களில் அந்த முதலாளி இரட்சிக்கப்பட்டார். அடிமைகளை கொடுமைப்படுத்துவதையும் அவர் விட்டுவிட்டார். எனினும் ரிச்சர்டு ஆலனை விடுவிக்க வேண்டும் என்றால் அவருக்கு முழு சுதந்தரம் கொடுக்க வேண்டும் என்றால் பெரும் தொகை முதலாளிக்கு கொடுக்க வேண்டும் என்று

சட்டம் இருந்தது. எனவே அந்த சட்டத்தின்படி பெரும் தொகைக்கு பதிலாக இரண்டாயிரம் டாலர் கொடுத்தால் போதும் உங்களை நான் விடுவிக்கி றேன் என்று கூறிவிட்டார்.

ரிச்சர்டு ஆலன் மூன்று வருடம் கடினமாக வேலை செய்து இரண்டாயிரம் டாலரை கொடுத்து விடுதலையானார். தனக்கு இயேசுவை பற்றி சொன்ன போதகர் மூலமாக பாஸ்டராக மாறினார். தன்னை சார்ந்த கருப்பின ஜனங்களுக்கு பிரசங்கம் செய்தார். இயேசு தரும் விடுதலையை குறித்து, உலகப் பிரகாரமான விடுதலையை குறித்தும் பேசினார். அவருடைய பேச்சு வெள்ளைக்காரர் களையும் கவர்ந்தது. இதைக் கண்ட வெள்ளைக் கார பகைவர்கள், பேராயர்கள் அவரை பயங்கரமாக திட்டி, தங்கள் ஆலயத்தில் பிரசங்கிக்க வரக் கூடாது என்று அவரை மிரட்டினார்கள், எதிர்த் தார்கள், விரட்டினார்கள். என்ன செய்வது என்று தெரியாமல் ஆலன் தவித்தார். இவருடைய கூட்டங் களுக்கு எந்த வெள்ளைக்காரர்களும் போகக் கூடாது என்று கூறிவிட்டனர். அந்நிலையில் அவர் அருகிலுள்ள ஒரு மெக்கானிக் குடோன் காலியாக இருப்பதை கண்டு அங்கே சபையை ஆரம்பித்தார். அதையும் தடை செய்ய வந்தனர். எனினும் எதிர்பாராத விதமாக அமெரிக்க பாராளுமன்ற உறுப்பினர் அவரது ஆலயத்திற்கு வந்தார். அவர் ஆலனுக்கு உதவி செய்தபடியால் பகைவர்களால் இவரை ஒன்றும் செய்ய முடியவில்லை.

திடீரென்று அந்த தேசத்தில் பயங்கரமான கொள்ளை நோய் வந்தது. இவரை கொடுமைப் படுத்தின வெள்ளைக்காரர்களும் அதில் அகப்பட்டு மரபடுக்கையில் இருந்தார்கள். அச்சமயத்தில் வெள்ளைகாரர்களுக்கு உதவி செய்ய அவர்கள் மத்தியில் யாரும் முன்வரவில்லை. ஆனால் ரிச்சர்டு ஆலன் தன்னுடைய கருப்பின மக்களுடன் சேர்ந்து வெள்ளைக்காரர்களுக்கு உதவிகள் செய்தார். இதைக்கண்ட அந்த வெள்ளைக்காரர்களின் மனம் நெகிழ்ந்தது. கருப்பின மக்கள் ஆராதனை செய்வதற்கு சுதந்திரம் கொடுத்தார்கள். ரிச்சர்டு ஆலன் முதன் முதலாக மெத்தடிஸ்ட் என்ற திருச்சபையை நிலை நாட்டினார். அந்த ஸ்தாபனமே இன்று உலகம் எங்கும் பரவி பலன் தந்து கொண்டிருக்கிறது. என்ன ஆச்சரியம் பாருங்கள்!

ஊழியம் செய்யும் பொழுது ஏராளமான தடைகள் வரலாம். சோர்ந்து போகாதீர்கள். கர்த்தர் இந்த ஆண்டு அந்த தடைகளை எல்லாம் நீக்கி ஊழியத்தில் வெற்றி வாகை சூடச் செய்வார். நம்பிக்கையோடும், விசுவாசத்தோடும் தொடர்ந்து செய்யுங்கள்.

## 5. கர்த்தருக்கும், அவரது ஊழியத்திற்கும், ஏழைகளுக்கும் தாராளமாய் கொடுப்பதால் தடைகள் நீங்கி இரட்டிப்பான நன்மைகளும், வெற்றியும் பெற உதவி செய்வார்.

சமீப காலங்களில் எதிர்பாராதவிதமாக இயற்கை சீற்றங்கள், கொள்ளை நோய்கள் பெருகி வருவதை அறிவோம். இவற்றிலிருந்தும், மனிதர்களால் ஏமாற்றப்படுகிற நிலை, சடுதியான விபத்துக்கள் அனைத்திலிருந்தும் கர்த்தர் பாதுகாப் பார். நீடித்த நாட்களால் நம்மை திருப்தியாக்கி தம்முடைய இரட்சிப்பை நமக்கு வெளிப்படுத்துவார். (சங்கீதம் 91:15, 16) (சங்கீதம் 18:50)

ஜான். டி ராக்பெல்லர் என்பவர் சிறுவயதிலேயே வியாபாரம் செய்வதில் ஆர்வமாக இருந்தார். அவர் அனுதினமும் வேதம் வாசிக்கும் பழக்கமுடையவர். ஒரு நாள் வேதம் வாசித்துக் கொண்டிருந்தப்பொழுது, பூமியிலுள்ள "உயர்ந்த ஸ்தானங்களின்மேல் அவனை ஏறிவரப் பண்ணி னார், வயலில் விளையும் பலனை அவனுக்குப் புசிக்கக் கொடுத்தார்; கன்மலையிலுள்ள தேனை யும், கற்பாறையிலிருந்து வடியும் எண்ணெயையும் அவன் உண்ணும்படி செய்தார் (உபாகமம் 32:13; 33: 19-24) என்ற வசனம் அவரை சிந்திக்க வைத்தது. எனவே, பூமியின் அடியில் தோண்டினால் நிச்சயமாக எண்ணெய் கிடைக்கும் என்ற நம்பிக் கையிலே அவருடைய தொழிலை தொடங்கினார். அவரது 33வது வயதில் முதன் முறையாக மில்லியன் டாலர்களை சம்பாதித்தார். அமெரிக்கா வில் மிகப்பெரிய பணக்காரர் ஆனார். 43வது வயதில் உலகத்தி லேயே மிகப்பெரிய கம்பெனிக்கு உரிமையாளர் ஆனார். 20ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் பெட்ரோலிய பொருள் சந்தையில் ஒரு பெரும் புரட்சியை ஏற்படுத்திய ஸ்டேண்டர்டு ஆயில் என்ற எண்ணெய் நிறுவனத்தை நிறுவினார். புகழின் உச்சியில் இவர் இருந்த பொழுது இவருக்கு அலோபீசியா (முடி கொட்டும் நிலை) என்னும் வியாதி வந்தது. அவர் தூக்கமின்றி மிகுந்த கஷ்டப்பட்டார். மருத்துவர்கள் அவரை கைவிட்டு விட்டனர். அப்பொழுதுதான் அவருக்கு ஒரு தெளிவு வந்தது.

பணமே எல்லாவற்றிலும் வெற்றி தரும் என்று நினைத்த அவரால் அந்த சின்ன வியாதியை அவர் சம்பாதித்த பணத்தைக் கொண்டு சுகம் பெற முடியவில்லை. அப்பொழுது அருகில் உள்ள ஒரு ஊழியரை கூப்பிட்டு தனக்காக ஜெபிக்கும்படி சொன்னார். அந்த ஊழியரின் பெயர் ஜான். டி.

**ராக்பெல்லர். அந்த ஊழியர் எதையும் எதிர் பார்க்காமல் அவருக்காக ஜெபித்தார். அத்துடன் சிறிய அறிவுரையை கூறினார். நீங்கள் எவ்வளவு பெரிய பணக்காரராக இருந்தாலும் உங்களுக் கென்று வாழாதீர்கள். கர்த்தர் அதிகமாக ஆசீர்வதித்து இருக்கும்பொழுது கர்த்தருக்கும் கர்த்தருடைய ஊழியத்திற்கும் ஆலய பணிகளுக்கும் ஆதரவற்ற இல்லங்களில் வாழ்கிற பிள்ளைகளுக்கும், வயதானவர்களுக்கும் நீங்கள் உதவி செய்யும் பொழுது கர்த்தர் நிச்சயமாகய் உங்களுக்கு இரங்குவார் என்று சொன்னார். அந்த நபரும் ஊழியக்காரரின் வார்த்தைக்கு கீழ்ப்படிந்து அப்படியே செய்தார். தன்னுடைய அளவற்ற செல்வத்தை எடுத்து ஆலயத்திற்கும் மிஷனெரி ஊழியங்களுக்கும் கொடுக்க ஆரம்பித்தார். கல்வி பணிக்காகவும் ஏழை மக்களின் நல்வாழ்விற் காகவும் அவர்கள் தேவைகள் சந்திக்கப்படவும் உற்சாகமாய் உதவிக்கரம் நீட்டினார் அவர் செய்த உதவியின் மூலம் தான் பென்சிலின் மருந்து கண்டுபிடிக்கப்பட்டது. அதன்பின் கர்த்தரிடம் ஜெபித்தார். சங்கீதம் 41:1,2,8,3ன்படி அவருடைய வியாதியை கர்த்தர் தம்முடைய தழும்புகளால் குணமாக்கி நீடிய ஆயுளை கூட்டி கொடுத்தார். மருத்துவர்கள் அவர் ஒரு வருடம் தான் உயிரோடு இருப்பார் என்று கூறினார்கள். ஆனால் கர்த்தர் அவர் மீது மனமிரங்கி 98 வயது வரை சுகமாய் வாழ்ந்து சுகித்திருக்க கிருபை செய்தார்.**

*ஆம் எனக்கன்பானவர்களே! இன்று அநேகர் வேலையில்லாமல், வாழ்க்கையில் உயர்த்தப்படாமல் சொந்த வீடு இல்லாமல் கஷ்டப்படுகிறார்கள். திருமணம் ஆகாமால் வேதனைப்படுவார்கள். சூழ்நிலைக்கு தக்கவாறு கர்த்தரை தேடுவார்கள். அதற்கு பின் ஏனோ, தானோ என்று இருந்துவிட்டு, அவ்வப்போது காணிக்கையை கொடுத்துவிட்டு பிறகு தேவனை மறந்துவிடுவார்கள். அப்படிப்பட்ட வாழ்க்கை நாம் வாழக் கூடாது. தன்னையே நமக்காக தியாக பலியாக கொடுத்த கர்த்தருக்கும், அவருடைய ராஜ்யத்திற்கும் முதலிடம் கொடுக்க வேண்டும்.*

**திரு. கால்கேட் என்பவர் சிறிய சோப் கம்பெனியில் வேலைக்கு சேர்ந்து இந்த அளவுக்கு கர்த்தர் அவரை உயர்த்தி இருப்பார் என்றால் அதற்கு காரணம் கர்த்தருக்கு 10 சதவிகிதத்தி லிருந்து 90 சதவிகிதம் வரை தன்னுடைய வருமானத்தில் கொடுக்கிறார். நாம் கொடுத்து பழகும் பொழுது நமது முன்னேற்றத்தை தடை செய்யும் எல்லா தடைகளையும் கர்த்தர் நீக்கிப் போடுவார்.**

*எனது வாழ்க்கையிலும் எத்தனையோ சோகங்களை நான் கண்டிருக்கிறேன். 13ஆம் வயதில் எனக்கு சிறுநீரகக் கோளாறு ஏற்பட்டது. பயங்கரமான ஆஸ்துமா தாக்கினது. அல்சர் வியாதியால் கஷ்டப்பட்டேன். பலவித கொடுமைக்கு உட்படுத்தப் பட்டேன். 9 முறை விபத்துக்கள் ஏற்பட்டது. மூன்று முறை இறந்து போனேன். மலேரியா, கொள்ளை நோய் தாக்கினது. ஆனால் இவை எல்லாவற்றிலும் இருந்து விடுவிக்கப்பட்டு இன்று ஜீவனோடு கர்த்தர் என்னை வைத்திருப்பதற்கு காரணம் நான் முதலாவது தேவனுடைய ராஜ்யத்தை தேடினது தான். அடுத்ததாக கர்த்தர் எனக்குக் கொடுக்கும் எல்லா வற்றிலும் கர்த்தருக்கு முதற்பங்கை கொடுத்து விடுவேன். அடுத்து ஏராளமான ஏழைகளுக்கும் உதவி செய்கிறேன். இதன் காரணமாக ஆரம்பிக்கப்பட்டது தான்* **S J Saves Trust.**

*கர்த்தருக்கு கொடுக்க நான் ஒருபோதும் தயங்கினதே இல்லை. நீங்களும் அவ்வாறு கர்த்தருக்கும் ஊழியத்திற்கும் மனமுவந்து கொடுக்கும் பொழுது ஆச்சரியப்படும் வகையில் கர்த்தர் தடைகளை நீக்குவார்.*

*பொல்லாத மனிதர்களின் கொடுமைக்கு உங்களை விலக்கி, அவர்கள் கரத்திற்கு உங்களை தப்புவித்து, எல்லாவற்றிலும் நீங்கள் உயர்ந்து கொண்டே போவதற்கான வாசலை கர்த்தர் திறப்பார். நீங்கள் ஒருபோதும் தாழ்ச்சி அடைய மாட்டீர்கள். தேவனையே நம்பி அவரையே சார்ந்திருப்போம். கர்த்தருடைய வேதத்தை தினமும் தியானித்து அதன்படி நடப்போம். அப்பொழுது நாம் மகத்தான வெற்றியை இந்த ஆண்டில் காண்போம்.* **சங்கீதம் 1:3; நீதிமொழிகள் 22:9; ஏசாயா 58:11; எரேமியா 17:7,8 சங்கீதம் 37:31; 41:1,2,8,3 அப்போஸ்தலர் 10:4; மத்தேயு 10:42; 2 கொரி. 9:8-15; பிலிப்பியர் 4:19**

*கர்த்தர் தாமே உங்களோடு இருப்பாராக!*

திருச்சியில்
விசேஷித்த ஜெபக்கூடுகை
நாள் : ஜனவரி 17 (செவ்வாய்க்கிழமை)
நேரம் : காலை 9.30 மணி முதல் 2.30 மணி வரை
இடம் : அன்பரின் ஊழிய ஜெப ஸ்தலம்
10வது குறுக்குத்தெரு மேற்கு விஸ்தரிப்பு
தில்லைநகர், திருச்சி – 18
தேவ செய்தி
Dr. ஆனந்த ஸ்திரா
குடும்பத்தினர்
தொடர்புக்கு : 94888 45627 & 80987 42638

# ஜனவரி மாதத்திற்குரிய திசரி வாக்குத்தத்த வசனங்கள்

## அன்பு

| | |
|---|---|
| 1 | தேவன், தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப் போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார். (யோவான் 3:16) |
| 2 | மெய்யாகவே அவர் ஜனங்களைச் சிநேகிக்கிறார்; (உபாகமம் 33:3) |
| 3 | அநாதி சிநேகத்தால் உன்னைச் சிநேகித்தேன்; (எரேமியா 31:3) |
| 4 | தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப் பண்ணுகிறார். (ரோமர் 5:8) |
| 5 | தகப்பன் தான் நேசிக்கிறபுத்திரனைச் சிட்சிக்கிறதுபோல, கர்த்தரும் எவனிடத்தில் அன்புகூருகிறாரோ அவனைச் சிட்சிக்கிறார். (நீதி. 3:12) |
| 6 | அன்பே சகல பாவங்களையும் மூடும். (நீதி. 10:12) |
| 7 | கர்த்தருடைய பரிசுத்தவான்களே, நீங்களெல்லாரும் அவரில் அன்புகூருங்கள். (சங். 31:23) |
| 8 | நீதிமான்களைக் கர்த்தர் சிநேகிக்கிறார். (சங். 146:8) |
| 9 | மனுஷரைக் கட்டி இழுக்கிற அன்பின் கயிறுகளால் நான் அவர்களை இழுத்தேன். (ஓசியா 11:4) |
| 10 | பிதா என்னில் அன்பாயிருக்கிறதுபோல நானும் உங்களில் அன்பாயிருக்கிறேன். என்னுடைய அன்பிலே நிலைத்திருங்கள். (யோவான் 15:9) |
| 11 | நாம் தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள்வதே அவரிடத்தில் அன்பு கூருவதாம்; (1 யோவான் 5:3) |
| 12 | நேசம் மரணத்தைப்போல் வலிது; (உன்னத. 8:6) |
| 13 | ஒருவன் தன் சிநேகிதருக்காகத் தன் ஜீவனைக் கொடுக்கிற அன்பிலும் அதிகமான அன்பு ஒருவரிடத்திலுமில்லை. (யோவான் 15:13) |
| 14 | அவர் முந்தி நம்மிடத்தில் அன்பு கூர்ந்தபடியால் நாமும் அவரிடத்தில் அன்பு கூருகிறோம். (1 யோவான் 4:19) |
| 15 | நாம் தேவனுடைய பிள்ளைகளென்று அழைக்கப்படுவதினாலே பிதாவானவர் நமக்குப் பாராட்டின அன்பு எவ்வளவு பெரிதென்று பாருங்கள். (1யோவான் 3:1) |

| | |
|---|---|
| 16 | நாம் நம்மில் அன்புகூருகிறவராலே முற்றும் ஜெயங்கொள்ளுகிறவர் களாயிருக்கிறோமே. (ரோமர் 8:37) |
| 17 | அன்பில்லாதவன் தேவனை அறியான்; தேவன் அன்பாகவே இருக்கிறார். (1 யோவான் 4:8) |
| 18 | அவர் தமது அன்பினிமித்தமும், தமது பரிதாபத்தினிமித்தமும் அவர்களை மீட்டு, பூர்வநாட்களிலெல்லாம் அவர்களைத் தூக்கிச் சுமந்துவந்தார். (ஏசாயா 63:9) |
| 19 | அவர் தம்முடைய ஜீவனை நமக்காகக் கொடுத்ததினாலே அன்பு இன்னதென்று அறிந்திருக்கிறோம். (1 யோவான் 3:16) |
| 20 | விசுவாசம், நம்பிக்கை, அன்பு இம்மூன்றும் நிலைத்திருக்கிறது; இவைகளில் அன்பே பெரியது. (1கொரி. 13:13) |
| 21 | உயர்வானாலும், தாழ்வானாலும், வேறெந்தச் சிருஷ்டியானாலும் நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவிலுள்ள தேவனுடைய அன்பை விட்டு நம்மைப் பிரிக்கமாட்டாதென்று நிச்சயித்திருக்கிறேன். (ரோமர் 8:39) |
| 22 | இயேசு... தாம் இவ்வுலகத்திலிருக்கிற தம்முடையவர்களிடத்தில் அன்பு வைத்த படியே, முடிவு பரியந்தமும் அவர்களிடத்தில் அன்பு வைத்தார். (யோவான் 13:1) |
| 23 | ஒருவன் தன் சிநேகிதருக்காகத் தன் ஜீவனைக் கொடுக்கிற அன்பிலும் அதிகமான அன்பு ஒருவரிடத்திலுமில்லை. (யோவான் 15:13) |
| 24 | தேவனில் அன்புகூருகிறவனெவனோ, அவன் தேவனால் அறியப்பட்டிருக்கிறான். (1 கொரி 8:3) |
| 25 | நாம் ஒருவரிடத்தில் ஒருவர் அன்புகூர்ந்தால் தேவன் நமக்குள் நிலைத்திருக்-கிறார்; அவருடைய அன்பும் நமக்குள் பூரணப்படும். (1யோவான் 4:12) |
| 26 | நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே, தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப்பண்ணுகிறார். (ரோமர் 5:8) |
| 27 | பூரணசற்குணத்தின் கட்டாகிய அன்பைத் தரித்துக் கொள்ளுங்கள். (கொலோ. 3:14) |
| 28 | கிறிஸ்துவினுடைய அன்பு எங்களை நெருக்கி ஏவுகிறது. (2கொரி. 5:14) |
| 29 | நமக்கு அருளப்பட்ட பரிசுத்த ஆவியினாலே தேவ அன்பு நம்முடைய இருதயங்களில் ஊற்றப்பட்டிருக்கிறபடியால்... (ரோமர் 5:5) |
| 30 | ஒருவன் என்னில் அன்பாயிருந்தால், அவன் என் வசனத்தைக் கைக்கொள்ளுவான், அவனில் என் பிதா அன்பாயிருப்பார்; நாங்கள் அவனிடத்தில் வந்து அவனோடே வாசம் பண்ணுவோம். (யோவான் 14:23) |
| 31 | யோனாவின் குமாரனாகிய சீமோனே, நீ என்னிடத்தில் அன்பாயிருக்கிறாயா? (யோவான் 21:16) |



# 2022- ம் ஆண்டில் அன்பரின் ஊழியத்தின் வாயிலாக நடைபெற்ற சுவிசேஷ பணிகள் பற்றிய அறிக்கை

## கூட்டங்கள்

- ❖ தமிழ்நாட்டின் முக்கிய மாவட்டங்களான திருச்சி, மதுரை, தேனி, திருநெல்வேலி, தூத்துக்குடி, நாகர்கோவில், ஒட்டன்சத்திரம், திருப்பூர், திண்டுக்கல், தேனி, தஞ்சாவூர் சென்னை, ஆந்திரமாநிலம் ஐதராபாத், விஜயவாடா, ராஜமன்றி, குண்டூர் மற்றும் கர்நாடக மாநிலம் பெங்களூர் ஆகிய இடங்களில் மொத்தம் 41 குடும்ப ஆசீர்வாதக் கூட்டங்களும், 9 இடங்களில் உங்கள் விடுதலையின் நாள் கூட்டங்களும் நடைபெற கர்த்தர் உதவி செய்தார்.
- ❖ கூட்டங்களுக்கு வந்த மக்கள் நோயின் கட்டுகளிலிருந்தும், பாவ, சாபக் கட்டிகளிலிருந்தும், பிசாசின் போராட்டங்களிலிருந்தும் விடுதலை பெற்று தேவகிருபையால் சமாதானத்துடன் வாழுகின்றனர்.
- ❖ திருமணத் தடைமாறி ஏராளமான பிள்ளைகளுக்கு கடந்த ஆண்டில் திருமணம் நடைபெற கர்த்தர் இரங்கினார். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்!
- ❖ குழந்தைபாக்கியம் இல்லாத தம்பதியினர் பலருக்கு குழந்தை பிறக்க கர்த்தர் தாமே தயை செய்தார். அதற்காகவும் கர்த்தரை துதிப்போம்!
- ❖ வேலை இல்லாத பலருக்கு வேலை கிடைத்து சாட்சி சொல்லும்படி கர்த்தர் உதவி செய்தார். அதை நமது அன்பரின் ஊழிய பத்திரிக்கையில் வெளியிட்டுள்ளோம்.

## அப்போஸ்தல வல்லமை முகாம்

- ❖ ஆந்திராவில் அப்போஸ்தல தீர்க்கதரிசன வல்லமை முகாம் நடைபெற்றது.
- ❖ நாகர்கோவிலில் வல்லமை முகாம் நடைபெற்றது.
- ❖ ஹைதராபாத்தில் வல்லமை முகாம் நடைபெற்றது.
- ❖ திருச்சி அன்பரின் ஊழிய ஜெப ஸ்தலத்தில் வல்லமை முகாம் நடைபெற்றது.
- ❖ இம்முகாமிற்கு பங்காளர்களில் பலர் குடும்பமாகவும், கர்த்தருக்கு ஊழியம் செய்கிற பிள்ளைகளும் கலந்து கொண்டு ஆவிக்குரிய பரலோக காரியங்களை கற்று புது அபிஷேகத்துடன் சென்றனர்.

## அனுதின அற்புதம்

❖ அதிகாலை 5 மணிக்கு ஒளிப்பரப்பாகும் அனுதின அற்புதம் நிகழ்ச்சி தினந்தோறும் Youtube-ல் வெளிவர கர்த்தர் கிருபை செய்தார். இந்நிகழ்ச்சியின் மூலம் நூற்றுக்கணக்கான மக்கள் பயனடைகின்றனர்.

## Praising time

- ❖ **Ministry of Jesus Youtube**-சேனலில் **Praising time, அருள்மாமழை, ஆறுதலின் நேரம், அற்புதஆராதனை, அற்புத விடுதலை** என்னும் சிறப்பு நிகழ்ச்சிகள் வெளிவர கர்த்தர் உதவி செய்தார்.
- ❖ இந்த நிகழ்ச்சிகள் வாயிலாக கர்த்தரை ஆராதித்து மகிழ்ந்தோம். தேவ செய்திகள் வாயிலாக சுவிசேஷம் அறிவிக்கப்பட்டது.
- ❖ ஜோனத்தன் மோசஸ் பாடிய புதிய பாடல் **"என் பின்னாக வா"** சமூக வலைதளமான **Youtube**-ல் வெளியிடப்பட்டது.
- ❖ **"வேதாகமப் பெண்கள்"** என்ற தலைப்பில் வேதத்தில் காணப்படும் பெண்களைப் பற்றிய ஆழமான சத்தியங்கள் தொகுத்து வழங்கப்பட்டது.

## பத்திரிக்கை ஊழியம்

❖ அன்பரின் ஊழியம் பத்திரிக்கை தமிழ், தெலுங்கு மொழிகளில் வெளிவருகிறது.

## தொலைக்காட்சி ஊழியம்

❖ அன்பரின் ஆறுதல் டி.வி.நிகழ்ச்சிகள் தமிழ், மலையாளம், தெலுங்கு ஆகிய மொழிகளில் ஒளிப்பரப்பாகிறது. இதன் மூலம் ஏராளமான ஆத்துமாக்களுக்கு சுவிசேஷம் கொண்டு செல்ல கர்த்தர் உதவி செய்தார்.

## கடித ஊழியங்கள்

- ❖ பங்காளர்களிடமிருந்து வருகிற கடிதங்களுக்கு வேத வசனத்தைக் கொண்டு தமிழ், ஆங்கிலம், தெலுங்கு மொழிகளில் ஆறுதலான பதில் கடிதம் அனுப்பப்பட்டு வருகிறது. இதனால் பலர் தேவ சமாதானத்தைப் பெறுகின்றனர்.
- ❖ இ.மெயில், வாட்ஸ்அப் வாயிலாகவும் ஆறுதலான பதில் அனுப்பி வருகிறோம்.

## தொலைபேசி ஊழியம்

- ❖ தமிழ், ஆங்கிலம், மலையாளம், தெலுங்கு ஆகிய மொழிகளில் தொலைபேசி வாயிலாக ஜெபித்து பலருடைய கண்ணீரை கர்த்தர் களிப்பாக மாற்றியுள்ளார்.

**ஊழியத்திற்காக ஜெபித்து, காணிக்கை வாயிலாக உற்சாகமாய் தாங்கி வருகிற அன்பு பங்காளர்களை கர்த்தர் தாமே இந்த புதிய ஆண்டில் அளவில்லாமல் ஆசீர்வதிக்கும்படி நாங்கள் குடும்பமாக ஜெபிக்கிறோம்.**

நான் அவர்களுக்கு என் ஆலயத்திலும், என் மதில்களுக்குள்ளும் குமாரருக்கும் குமாரத்திகளுக்குமுரிய இடத்தையும் கீர்த்தியையும் பார்க்கிலும், உத்தம இடத்தையும் கீர்த்தியையும் கொடுப்பேன், என்றும் அழியாத நித்திய நாமத்தை அவர்களுக்கு அருளுவேன். (ஏசாயா 56:5)

## S.J. SAVES TRUST-ன் கடந்த ஆண்டு அறிக்கை

நாமக்கல், சேலம் மாவட்டத்தில் உள்ள 12 ட்யூசன் மையங்களில் நடைபெறுகிற மாலை நேர ட்யூசன் வகுப்பிற்கு சுமார் 1100 மாணவர்கள் வந்து படிக்கின்றார்கள். இவர்கள் அனைவருக்கும் இரவு உணவு ஒவ்வொரு நாளும் வழங்கப்பட்டது.

- ❖ கடந்த ஆண்டு 2410 மாணவ, மாணவிகளுக்கு பல்வேறு உதவிகள் வழங்கப்பட்டது.
- ❖ கணவரை இழந்த பெண்கள், கணவரால் கைவிடப்பட்ட பெண்கள் என மொத்தம் 533 பேருக்கு அடிப்படை தேவைக்குரிய பொருள்கள் கொடுக்கப்பட்டது.
- ❖ கண் பார்வையற்றவர்கள் 20 பேருக்கு அடிப்படை தேவைக்கான பொருள்கள் வழங்கப்பட்டது.
- ❖ தீராத மரணவியாதியினால் கஷ்டப்படுகிற 50 பேருக்கும் உணவு, மருந்து, CD count ஏறுவதற்காக நவதானியங்கள், பருப்பு வகைகள், புரோட்டின் பவுடர் மற்றும் எண்ணெய் சோப் வழங்கப்பட்டது.
- ❖ கணவரை இழந்த பெண்கள் 25 பேருக்கு அவர்களுடைய வாழ்வாதாரத்திற்காக சினைஆடுகள், கடா, ஆட்டுக்குட்டிகளை வழங்கினோம்.
- ❖ ஏழைப்பிள்ளைகள் 402 பேருக்கு கிறிஸ்துமஸ் புத்தாடைகள், இனிப்பு வகைகள், பிரியாணி போன்ற உணவு வகைகளைக் கொடுத்துள்ளோம்.


## S.J.S.T. மருத்துவமனையின் கடந்த ஆண்டு அறிக்கை

- ✦ S.J.S.T. மருத்துவமனைக்கு கர்த்தர் பாராட்டின கிருபை பெரியது!
- ✦ மருத்துவமனை கட்டுவதற்கான புதிய திட்டங்களை கர்த்தர் தந்தார்.
- ✦ Ultra Sound Scan machine, Electrolyte Machine, Ventilator வாங்குவதற்கும், கர்த்தர் உதவி செய்தார்!
- ✦ புதிய மருத்துவ உபகரணங்கள் வாங்குவதற்கான முயற்சிகள் தொடர்ந்து எடுக்கப்படுகிறது!
- ✦ புதிய மருத்துவர்களை கர்த்தர் கொடுத்தார்!

அன்பு பங்காளர்களாகிய நீங்களே மேற்கண்ட பணிகளுக்கு மிகுந்த உதாரகுணத்துடன் நன்கொடைகளை வழங்கி தாங்கி வருவதற்காக கர்த்தரை மனதார ஸ்தோத்தரித்து உங்களுக்கு எங்கள் நன்றியை கூறிக்கொள்கிறோம்.

இந்த பணிகளுக்கு தொடர்ந்து உதவி செய்கிற நீங்களும், உங்கள் சந்ததிகளும் கர்த்தருக்குள் மகிமையாக உயர்த்தப்படுவீர்கள், நித்திய கீர்த்தியுள்ளவர்களாவீர்கள்.

- ➢ **வாரியிறைத்தான், ஏழைகளுக்குக் கொடுத்தான், அவனுடைய நீதி என்றென்றைக்கும் நிற்கும், அவன் கொம்பு மகிமையாய் உயர்த்தப்படும். சங். 112:9**



# Praise Report
# துதி அறிக்கை

**கிறிஸ்து இயேசுவின் மனதுருக்கம் பழுதாய் போன உறுப்புகளை புதியதாய் உருவாக்குகிறது. இயேசு கிறிஸ்து இன்றைக்கும் ஜீவிக்கிறார்!**

நானும், என் கணவரும் அன்பரின் ஊழிய தொலைக்காட்சி நிகழ்ச்சியை தற்செயலாக பார்த்தோம். அதில் இயேசுகிறிஸ்துவினுடைய மனதுருக்கமும், தேவ வல்லமையும் வெளிப்படு வதை அறிந்தோம். இயேசு கிறிஸ்து எவ்வளவு அன்புள்ளவர் என்பதையும் உணர்ந்துக் கொண் டோம். இதனிமித்தம் Dr.Ananda Stira அவர்களை நேரில் பார்க்க விரும்பி, பெங்களூரில் நடைபெற்ற குடும்ப ஆசீர்வாதக் கூட்டத்தில் கலந்து கொண்டோம்.

என்னுடைய வாழ்க்கை மிகவும் சோக மானது. எனக்கு பல காலமாக Fistula என்கிற நோய் மலக்குடலில் இருந்தது. நானும் எனது கணவரும் மருத்துவரை அணுகினோம். அதற்கான சிகிச்சையை தொடர்ந்து எடுத்துக் கொண்டேன். முடிவில் அறுவை சிகிச்சையும் எனக்கு செய்யப்பட்டது. தொடர்ந்து அதிகமான பிரச்சனைகள் மலக்குடலில் ஏற்பட்டது. அதுமாத்திரமல்ல இனப்பெருக்க உறுப்புகளிலும் சில பாதிப்புகள் உண்டானது. அதனால் 11 வருடமாக தொடர்ந்து அந்த இடத்தில் இரத்தம் கசிந்துக்கொண்டே இருக்கும்.

மலக்குடல் நோய் மற்றும் Re production system-ம் செய்த பல்வேறு அறுவை சிகிச்சை யினால் என்னால் நார்மலாக மலம் கழிக்க முடியாது. எனவே, மருத்துவர்கள் வலது பக்கத்தில் ஓட்டை போட்டு மலம் வெளியேறுவதற்கான பை வைக்க வேண்டும் என்று கூறி விட்டனர். நான் கூட்டத்திற்கு வந்த பொழுதும் கூட என்னால் உட்கார முடியவில்லை, அவ்வளவு வேதனைப் பட்டேன். அச்சமயத்தில் Dr.Ananda Stira அவர்கள் என்னை அழைத்து அன்போடு **"மகளே! நீ உபத்திரவத்தோடு வந்திருக்கிறாய்"** என்று கூறினவுடனே என் கண்களிலிருந்து நீர்த்தாரைகள் பெருகியது.

சகோதரர் எனக்காக ஜெபித்து **(யோவான் 11:35) "பயப்படாதேயுங்கள்! இன்று இயேசு உங்கள் வீட்டிற்கு வருவார், பழுதடைந்த உறுப்புகளை புதிதாக்குவார். உங்களுக்கு நிச்சயமாக அதிசீக்கிரத்தில் குழந்தை பாக்கியத்தை தருவார்"** என்று கூறினார்கள். என்ன ஆச்சரியம் அடுத்த நாளிலிருந்து எனக்கிருந்த அந்த இரத்த கசிவு நின்றது. அன்று இரவே இயேசு எனக்கு காட்சியளித்தார். என் சரீரத்தில் பெரிய மாற்றத்தை கண்டேன். புது உறுப்புகளை இயேசு கொடுத்தார். நானும் எனது கணவரும் இப்பொழுது சந்தோஷமாக வாழ்கி றோம். சகோதரர் சொன்னபடியே சீக்கிரம் எனக்கு குழந்தை பாக்கியத்தை இயேசு தருவார் என நம்புகிறோம். **கிறிஸ்துவின் மனதுருக்கமும் நிறைந்த சகோதரரின் ஜெபத்திற்கு கர்த்தர் தாமே மனமிரங்கி எனக்கு புது உறுப்புகளை கொடுத்தார், இயேசுகிறிஸ்துவுக்கு நன்றி!**

**- திருமதி. உஷாராணி, ஹைதராபாத்**

**படிப்பிற்குரிய தேவைகளை சந்தித்த கர்த்தர்**

என் பெயர் மரிய புஷ்பம். எனக்கு இரண்டு மகன்கள் உண்டு. 3 வருடங்களுக்கு முன்பு கன்னியாகுமரியில் இருந்து திருச்சியில் நடைபெற்ற குடும்ப ஆசீர்வாதக் கூட்டத்திற்கு நாங்கள் வந்திருந்தோம். அப்பொழுது சகோதரர்

Dr. ஆனந்த ஸ்திரா அவர்களிடம் எங்கள் இளைய மகனுடைய பி.எஸ்.சி. நர்சிங் படிப்பிற்காக ஜெபிக்கும்படி சொன்னோம். ஏனென்றால் அப்பொழுது நர்சிங் படிப்பிற்கான Fees கட்டுவதற்கு எங்களிடம் பணம் இல்லை.



**சகோதரர் பாரத்துடன் ஜெபித்து கர்த்தர் உங்கள் தேவையெல்லாம் சந்திப்பார் என்று சொன்னார்கள். அதன்படி நாங்கள் எந்த விதத்திலும் கடன் வாங்காதபடியும், சொத்துக் களை விற்காதபடியும் கர்த்தர் பாதுகாத்து, மகனுடைய 3 வருட படிப்பிற்குரிய பணத் தேவைகளை கர்த்தர் அற்புதமாக சந்தித்தார். மகன் படித்துக்கொண்டிருந்த நாட்களில் மூச்சு முட்டு பிரச்சனை வந்து அதிக கஷ்டப்பட்டான். அதற்காகவும் சகோதரர் ஜெபித்தார்கள். கர்த்தர் அந்த பிரச்சனையை நீக்கி நல்ல சுகத்தைக் கொடுத்தார். மகன் படிப்பை முடித்து இப்பொழுது வேலையில் இருக் கிறான். அவனுடைய முதல் மாத சம்பளத்தை அன்பரின் ஊழியத்திற்கு பொருத்தனை காணிக்கையாகத் தருகிறோம்.** இம்மட்டும் எங்களை நேர்த்தியாக வழிநடத்தி வருகிற கர்த்தரை மனதார ஸ்தோத்தரிக்கிறோம்.

**- சகோதரி மரிய புஷ்பம் கன்னியாகுமரி.**

## எங்கள் குடும்பத்தில் பல அற்புதங்களை செய்த கர்த்தர்!

எனது பேரனுக்கு நீண்ட காலமாக திருமணம் நடைபெறாமல் தடையாகவே இருந்தது. ராஜமன்றி கூட்டத்தில் கலந்துகொண்டு சகோதரரிடம் ஜெபிக்கும்படி கேட்டுக் கொண டோம். **திருமணத் தடை நீங்கி ஜூன் மாதம் 21ம் தேதி நல்ல முறையில் பேரனுடைய திருமணம் நடைபெற கர்த்தர் கிருபை செய்தார்.** மேலும் என்னுடைய நெருங்கிய உறவினருக்கு தலையில் மிகப்பெரிய வியாதி ஏற்பட்டது. சகோதரர் அவர்களுக்காக ஜெபித் தார்கள். **கர்த்தர் அற்புத சுகத்தை கொடுத்தார். எனக்கிருந்த இருதய வேதனையும் சகோதரரின் ஜெபத்தினால் அற்புதமாய் நீங்கி நல்ல சுகத்துடன் நான் வாழ தேவன் தாமே உதவி செய்தார்.** கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.

**- திருமதி. மெர்சி பகவதி, ராஜமன்றி**

## மரண ஆபத்திலிருந்து மீட்டெடுத்த தேவன்!

எனது கணவருக்கு கொரோனா தொற்று நோய் ஏற்பட்டு மிகவும் ஆபத்தான நிலையில் இருந்தார். அவர் பிழைப்பது கடினம் என மருத்துவர்கள் கூறிவிட்டார்கள். இந்நிலையில் செகந்திராபாத் கூட்டத்தில் நான் கலந்துக் கொண்டு எனது கணவருக்காக Dr. **ஆனந்த ஸ்திரா** அவர்களை ஜெபிக்கும்படி கேட்டுக் கொண்டேன். **கர்த்தர் ஜெபத்தை கேட்டு என் கணவருடைய மரணப் படுக்கையை மாற்றிப் போட்டு புது ஜீவனை தந்தார். அற்புத சுகத்தை தந்த தேவனுக்கு ஸ்தோத்திரம்!**

**- திருமதி. கல்யாணி, செகந்திராபாத்**

## மரணப் போராட்டத்திலிருந்து அற்புத விடுதலை

நான் மிகவும் வியாதிப்பட்டு மரணத் தருவாயில் இருந்தேன். பிழைப்பது அரிது என்று மருத்துவர்கள் கூறினர். சகோதரர் Dr. **ஆனந்த ஸ்திரா** அவர்களை தொடர்புகொண்டு எனது கண்ணீரின் நிலையை தெரிவித்தேன். எனது நிலையை கேட்டறிந்து சகோதரர் மிகவும்

dranandastira@mojindia.org, margret@mojindia.org,
joshua@mojindia.org, jane@mojindia.org,
info@mojindia.org

அன்புடன், கரிசனையுடன் விசாரித்து, அவரை தேவன் மரணப்படுக்கையிலிருந்து எப்படி விடுவித்தார், சுகப்படுத்தினார் என்பதை எடுத்து கூறி எனக்காக ஜெபம் செய்தார்கள். கர்த்தர் ஜெபத்திற்கு பதில் தந்தார். அந்த நாளிலிருந்தே சுகமாக ஆரம்பித்தேன். இப்பொழுது பரிபூரண சுகத்துடன் இருக்கிறேன். கர்த்தருக்கே மகிமை!

**- திரு. தேவதாஸ், நளகொண்டா**

## குழந்தை பாக்கியத்தை அருளிய தேவன்!



என் பெயர் ரோஸ்லின் வசந்த குமாரி. 2012-ம் ஆண்டில் திருமணம் நடைபெற்றது. அதற்கு பிறகு 2013-ம் ஆண்டிலும், 2016-ம் ஆண்டிலும் இரண்டு குழந்தைகள் கருவில் உண்டாகி அபாஷன் ஆகும் நிலை ஏற்பட்டது. அதன்பிறகு எங்களுக்கு குழந்தைகளே இல்லை.

இதற்காக திருச்சி அன்பரின் ஊழிய ஜெப ஸ்தலத்திற்கு வந்து சகோதரர் Dr. **ஆனந்த ஸ்திரா** அவர்களிடம் எனக்காக ஜெபிக்கும்படி சொன்னேன். அப்பொழுது சகோதரர் பாரத்துடன் ஜெபித்துவிட்டு **நீங்கள் இழந்ததை மீண்டும் கர்த்தர் இரட்டைத்தனையாகத் தருவார் என ஜெபித்து அனுப்பினார்கள். ஜெபத்தைக் கேட்ட கர்த்தர் தாமே 2021-ம் ஆண்டில் எனக்கு ஒரு அழகான ஆண்குழந்தையைத் தந்து ஆசீர்வதித்தார்.** எனக்காக ஜெபித்த சகோதரர் மற்றும் அவர்கள் குடும்பத்தினருக்கு எங்கள் நன்றியை தெரிவிக்கிறோம். கர்த்தரை மனதார ஸ்தோத்தரிக்கிறோம்.

**- சகோதரி ரோஸ்லின் வசந்தகுமாரி, குலமாணிக்கம்.**

## பரிகாரியாகிய கர்த்தர் கேன்சர் நோயை நீக்கி சுகம் தந்தார்!

எனக்கு கேன்ஸர் (Cervical Cancer) வியாதி ஏற்பட்டு 2018ஆம் ஆண்டில் மிகவும் கஷ்டப்பட்டேன். இந்நிலையில் ஐதராபாத் கூட்டத்தில் கலந்துகொண்டு சகோதரர் அவர்களிடம் ஜெபிக்கும்படி சொன்னேன். சகோதரர் பாரத்துடன் ஜெபித்து அனுப்பினார்கள். **கர்த்தர் அதிசயமாய் கேன்ஸர் வியாதியை என் சரீரத்தை விட்டு முற்றிலும் நீங்கும்படி உதவி செய்தார். நான் பூரண சுகத்துடன் இருக்கிறேன். கர்த்தருக்கே சகல துதி கனம் மகிமையைச் செலுத்துகிறேன்.**

**- சகோதரி வினோதா பாய், கரீம்நகர்**




Trichy

# WE ARE HIRING



- **Accountant**
  **(B.com. / M.com. Graduates)**
  *Skills Required : Tally ERP 9*
- **Data Entry Operators**
  **(Any UG/PG Candidates)**
  *Skills Required : Good in computing skills*
- **Correspondence**
  **(Any UG/PG Candidates)**
  *Skills Required : Typing & computing skills (Tamil, English, Telugu)*
- **Social Media Executive**
  **(Any UG/PG Candidates)**
  *Skills Required : Good in social media platforms , Good in English & Tamil*
- **Video Editors**
  **(Any UG/PG Candidates)**
  *Skills Required : Able to work in Adobe Premiere Pro & After Effects*
- **Graphic Designers**
  **(Any UG/PG Candidates)**
  *Skills Required : Able to work in Adobe Photoshop & Illustrator*
- **Camera Man**
  **with adequate experience**
- **Drivers**
- **Cooks**
- **House Keepers**

- **Male / Female**
- **Christians Preferred**
- **Accommodation will be provided**
- **Apt Remuneration will be paid**

Apply to :

**info@mojindia.org**



# S J SAVES TRUST
## நலிந்தோரின் நல்வாழ்வு அறக்கட்டளை

### ஏழை, எளியப் பிள்ளைகளுக்கு கல்வி

- ✦ **ஞானத்தைச் சம்பாதி, புத்தியையும் சம்பாதி, என் வாயின் வார்த்தைகளை மறவாமலும் விட்டு விலகாமலும் இரு.**
- ✦ **அதை விடாதே, அது உன்னைத் தற்காக்கும், அதின்மேல் பிரியமாயிரு, அது உன்னைக் காத்துக்கொள்ளும்.**
- ✦ **ஞானமே முக்கியம், ஞானத்தைச் சம்பாதி, என்னத்தைச் சம்பாதித்தாலும் புத்தியைச் சம்பாதித்துக் கொள்.**
- ✦ **நீ அதை மேன்மைப்படுத்து, அது உன்னை மேன்மைப்படுத்தும். நீ அதைத் தழுவிக் கொண்டால், அது உன்னைக் கனம்பண்ணும்.**
- ✦ **அது உன் தலைக்கு அலங்காரமான முடியைக் கொடுக்கும். அது மகிமையான கிரீடத்தை உனக்குச் சூட்டும்.**
- ✦ **என் மகனே, கேள், என் வார்த்தைகளை ஏற்றுக்கொள். அப்பொழுது உன் ஆயுசின் வருஷங்கள் அதிகமாகும். (நீதி. 4:5-10)**

மேற்கண்ட வேத வசனங்களின்படி நமது ட்யூஷன் சென்டர் மூலம் ஏராளமான மாணவர்களுக்கு மாலை நேர வகுப்புகளை நடத்தி, அவர்கள் அறிவிலும், ஞானத்திலும் சிறந்து விளங்குவதற்காக நல்ல ஆசிரியர்களை நியமித்து, கல்விப்பணியை செய்து வருகிறோம். ஏழை எளிய மாணவர்கள் பயன்பெற வேண்டும் என்ற நல்ல நோக்கத்துடன் ஆரம்பிக்கப்பட்ட நமது ட்யூஷன் சென்டரில் கல்வியுடன் சேர்த்து நல்லொழுக்கங்களையும் கற்றுத்தருகிறோம்.

நாமக்கல் மாவட்டம் செல்லிப்பாளையத்தை சேர்ந்த மாணவி தேவதர்ஷினி. தந்தை இறந்துவிட்டார். தாய் ஏழ்மையின் நிமித்தம் அதிகம் கஷ்டப்பட்டார்கள். அவர்களுக்கு நமது ட்யூஷன் சென்டருக்கு வரும் பிள்ளைகளுக்கு இரவு உணவு தயாரிக்கும் வேலையை கொடுத்தோம். அத்துடன் இவர்கள் மகளும் 7-ம் வகுப்பிலிருந்தே ட்யூஷன் சென்டருக்கு வர ஆரம்பித்தாள். நமது டயூஷன் சென்டர் மூலம் நன்கு கல்வி கற்று 10-ம் வகுப்பில் நல்ல மதிப்பெண்கள் எடுத்து வெற்றி பெற்றாள். ஆகவே தொடர்ந்து 11, 12-ம் வகுப்பு படிப்பதற்கு அரசாங்கமும் உதவி செய்தது. 12-ம் வகுப்பிலும் நல்ல மதிப்பெண்கள் எடுத்து வெற்றி பெற்றாள். தற்பொழுது நீட் தேர்விலும் வெற்றி பெற்று அரசு மருத்துவ கல்லூரியில் சேர்ந்து படிப்பதற்கான இடமும் கிடைத்திருக்கிறது. அந்த மாணவியின் மருத்துவப்படிப்பிற்கான புத்தகங்கள் வாங்குவதற்கும் **S.J.Saves Trust** மூலம் உதவிகள் செய்தோம்.

- ✦ **உன் ஆகாரத்தைத் தண்ணீர்கள்மேல் போடு, அநேக நாட்களுக்குப் பின்பு அதின் பலனைக் காண்பாய் (பிரசங்கி 11:1)**

### ஏழைப்பிள்ளைகளுக்கு கிறிஸ்துமஸ் புத்தாடை

- ✦ **பசியுள்ளவனுக்கு உன் ஆகாரத்தைப் பகிர்ந்து கொடுக்கிறதும், துரத்துண்ட சிறுமையானவர்களை வீட்டிலே சேர்த்துக் கொள்ளுகிறதும், வஸ்திரமில்லாதவனைக் கண்டால் அவனுக்கு வஸ்திரங் கொடுக்கிறதும், உன் மாம்சமானவனுக்கு உன்னை ஒளிக்காமலிருக்கிறதும் அல்லவோ எனக்கு உகந்த உபவாசம். (ஏசாயா 58:7)**

நம்மிடம் உதவி பெறுகிற மாணவ, மாணவிகளின் பெற்றோர்கள் அன்றாட கூலிவேலைக்கு செல்பவர்கள். வருகின்ற வருமானத்தைக் கொண்டு நன்றாக சாப்பிடாமல், வருமானம் முழுவதையும் குடித்து தீர்த்து அதன்பின் பல நோய்களுக்கு உள்ளாகி படுத்த படுக்கையில் தங்கள் வாழ்நாளை கழித்து வருகிறார்கள். இதனால் அவர்கள் பிள்ளைகளுக்கு சரியான உணவு, நல்ல உடை கிடைப்பதில்லை.

தங்கள் பிள்ளைகளை சிறு வயதிலேயே வேலைக்கு அனுப்புகின்றனர். சரியாக பள்ளிக்கு அனுப்புவதில்லை. அவர்கள் செங்கல் சூளை மண்ணில்தான் படுத்துள்ளனர். இத்தகைய

சிறுபிள்ளைகளுக்கு நமது ட்யூஷன் செண்டர் மூலம் மாலை நேர வகுப்புகள் எடுக்கப்படுகிறது. **அதில் 70 ஏழை சிறார்களுக்கும், 30 ஏழை மக்களுக்கும் பெட்ஷீட், பாய், டிபன் கேரியர், சத்து டானிக், புரோட்டின் பவுடர், இருமல் டானிக் கொடுத்தோம். அத்துடன் நோட்டு, பேனா, பென்சில், ரப்பர் போன்ற அத்தியாவசிய பொருட்களை கொடுத்தோம். பிரியாணி மற்றும் இனிப்பு வகைகளை கொடுத்தோம். இந்த ஏழை பிள்ளைகளுக்கு நாம் கிறிஸ்துமஸ் புத்தாடைகளை கொடுக்க கர்த்தர் தயை செய்தார்.**

மிகவும் பின்தங்கிய நிலையில் சரியான வஸ்திரம்கூட இல்லாத பிள்ளைகள் 100 பேருக்கு கிறிஸ்துமஸ் புத்தாடைகள் வழங்கப்பட்டது. இவர்களில் பல பிள்ளைகள் மிகவும் ஏழ்மையான நிலையில் இருப்பவர்கள். புத்தாடையுடன், பிரியாணி, கேக் மற்றும் படிப்பதற்கு தேவையான உபகரணங்கள், அடிப்படை தேவைக்குரிய சில பொருட்கள் வழங்கப்பட்டது.

இயேசு கிறிஸ்துவின் பிறப்பாகிய கிறிஸ்துமஸ் நன்னாளை முன்னிட்டு சேலம் மாவட்டத்தை சார்ந்த ஒட்டப்பட்டி, மேட்டுப்பட்டி, ஏரிக்காடு, பத்தாங்கல்மேடு, கருமாபுரம் ஆகிய கிராமங்களில் உள்ள 202 பிள்ளைகளுக்கு, இரண்டு வயது முதல் பதினெட்டு வயதிலான நமது ட்யூசன் மையத்தில் படிக்கும் மாணவ, மாணவிகளுக்கு நல்ல புத்தாடையும், கேக், விட்டமின் டானிக், காப் சிரப், தின்பண்டங்கள், பிரியாணி என அனைத்தும் வழங்கப்பட்டது. இதற்கு உதவின அனைத்து அன்புள்ள தாளாளர்களுக்கும் எங்கள் உளமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

இந்த குளிர் காலத்தில் இன்னும் 300 பிள்ளைகளுக்கு புத்தாடை கொடுக்க வேண்டியுள்ளது. இதனை பொங்கல் விடுமுறைக்கு முன் கொடுக்க விரும்புகிறோம். அன்புள்ளம் கொண்ட மக்கள் இதற்கு உதவி செய்யலாம்.

**ஏழை எளியவர்களுக்கு உதவிட கீழ்க்காணும் வங்கியின் மூலமாக அனுப்பவும்.**

| | | |
|---|---|---|
| Bank A/c Name: | | SJ Saves Trust |
| Account No. | : | 019150310875369 |
| Bank Name | : | Tamil Nadu Mercantile Bank |
| Branch | : | Palakarai, Trichy. |
| IFS Code | : | TMBL0000019 |
| A/c Type | : | Current |

**மருத்துவமனை பணிகளுக்கு கீழ்க்காணும் வங்கியின் மூலமாக அனுப்பவும்.**

| | |
|---|---|
| Bank A/c Name | : SJ Saves Trust |
| Account No. | : 36477148891 |
| Bank Name | : State Bank of India |
| Branch | : Cantonment, Trichy Main Branch |
| IFS Code | : SBIN 0000930 |
| A/c Type | : Current |

**IT Act–ன்படி Sec. 80G Exemption உண்டு**

## அன்பரின் ஆறுதல் டி.வி. நிகழ்ச்சி நேரங்கள்

**நம்பிக்கை TELEVISION**

புதன்
மதியம் 12.00 – 12.30

வியாழன், வெள்ளி, சனி, ஞாயிறு
இரவு 8.30 – 9.00

**தெலுங்கில் அன்பரின் ஆறுதல் நிகழ்ச்சிகள்**

ARADANA TV
புதன், வியாழன், வெள்ளி
இரவு 7.00 – 7.30

**மலையாளத்தில் அன்பரின் ஆறுதல் நிகழ்ச்சிகள்**

HARVEST TV கேரளம்
சனி
இரவு 7.30 – 8.00

**Tamil Whats App No: 95004 87059**

**சேலம் மாவட்டத்திலுள்ள ஒட்டப்பட்டி, மேட்டுப்பட்டி, ஏரிக்காடு, பத்தாங்கல்மேடு, கருமாபுரம் ஆகிய கிராமங்களில் உள்ள ஏழை பிள்ளைகள், கைம்பெண்களுக்கு உதவிகள் செய்தோம்.**















# S.J.S.T கிராமப்புற மருத்துவமனை பணிகள்

S.J.S.T. மருத்துவமனை நாளுக்கு நாள் வளர்ந்து வருகிறது. குறிப்பாக ULTRA SOUND SCAN வாங்கி பயன்பாட்டுக்கு வந்துவிட்டது. இதன்மூலம் அநேக நோயாளிகள் பயனடைந்து வருகிறார்கள்.

கடந்த இதழில் நாம் எழுதியிருந்தபடி உடனடியாக ஆப்ரேஷன் தியேட்டர் அதனை சார்ந்த உபகரணங்கள் வாங்க வேண்டியுள்ளது. இதன் மொத்த தேவை Rs.1,50,000,00/- (ஒன்றரை கோடி) இந்த தேவையை ஜெபத்தோடு நிறைவேற்ற உதவி செய்யும் பணிவன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

**ஒரு சதுர அடி மருத்துவமனை உபகரணங்களோடு**
**கட்ட ஆகும் செலவு Rs.6,000/-**
**கர்த்தர் தாமே காரியத்தை வாய்க்கப்பண்ண**
**ஜெபியுங்கள்.**
**கர்த்தர் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக!**






# உலகச் செய்திகள்

## கத்தார் உலக கோப்பை கால்பந்து தொடரில் அரங்கேறிய சுவாரஸ்யங்கள்




- லீக் சுற்றில் கனடா, டென்மார்க், கத்தார், செர்பியா, வேல்ஸ் அணிகள் ஒரு போட்டியில் கூட வெற்றி பெறவில்லை.
- இரண்டு ஹாட்ரிக், இரண்டு "சேம்சைடு" கோல் பதிவாகின.
- அர்ஜென்டினா அணி 3வது முறையாக கோப்பை வென்றது.
- அர்ஜென்டினாவின் மெஸ்சி, 5 முறை ஆட்ட நாயகன் விருது வென்றார்.
- பிரான்சின் எம்பாப்வே, அதிகபட்சமாக 8 கோல் அடித்து "கோல்டன் பூட்" விருது வென்றார்.
- கோஸ்டாரிகாவுக்கு எதிராக அதிகபட்சமாக 11 கோல்கள் அடிக்கப்பட்டன.
- பைனலில் 2 கோல் அடித்த அர்ஜென்டினாவின் மெஸ்சி உலக கோப்பை கால்பந்து வரலாற்றில் அதிக கோல் (தலா 13) அடித்த வீரர்கள் வரிசையில் 4வது இடத்தை பிரான்சின் போன்டைனுடன் பகிர்ந்து கொண்டார். லீக் சுற்றில் 2ல் வெற்றி பெற்ற சுவிட்சர்லாந்து அணி, உலக கோப்பை அரங்கில் தனது 14வது வெற்றியை பதிவு செய்தது.
- அர்ஜென்டினா சார்பில் 15 கோல் அடிக்கப்பட்டன.
- உலக கோப்பை வரலாற்றில் அர்ஜென்டினாவின் மெஸ்சி, அதிகபட்சமாக 19 போட்டிகளுக்கு கேப்டனாக செயல்பட்டுள்ளார்.
- பைனலில் வெற்றி பெற்ற அர்ஜென்டினா அணி, 20 ஆண்டுகளுக்கு பின் உலக கோப்பை வென்ற தென் அமெரிக்க அணியானது கடைசியாக 2002ல் பிரேசில் கோப்பை வென்றிருந்தது.
- அடுத்த உலக கோப்பை கால்பந்து தொடர் (23வது சீசன்), வரும் 2026ல் நடக்கவுள்ளது. அமெரிக்கா, கனடா, மெக்சிகோ இணைந்து நடத்துகின்றன. அணிகளின் எண்ணிக்கை 48.
- உலக கோப்பை கால்பந்து பைனலில் அசத்திய அர்ஜென்டினா அணிக்க சாம்பியன் கோப்பையுடன் ரூ.347 கோடி பரிசு தொகை வழங்கப்பட்டது. இரண்டாவது இடம் பிடித்த பிரான்ஸ் அணிக்கு ரூ.248 கோடி தரப்பட்டது.
- கால்பந்து ரசிகர்களுக்கு மகிழ்ச்சியான செய்தி. அர்ஜென்டினா அணிக்காக தொடர்ந்து விளையாட முடிவு செய்துள்ளார் "சூப்பர் ஸ்டார்" மெஸ்சி.

# உங்கள் ஆசீர்வாதத்தின் நாள்

**திருநெல்வேலியில்**

ஜனவரி 14 சனிக்கிழமை

இடம் : செல்வி மஹால்,
காளிமார்க் பேருந்து நிறுத்தம் அருகில்,
முருகன் குறிச்சி, பாளையங்கோட்டை
திருநெல்வேலி.

நேரம் : காலை 9.30 மணி முதல் மதியம் 1.00 மணி வரை

**சென்னையில்**

ஜனவரி 16 திங்கள் கிழமை

இடம் : J.J. மஹால்
L.K.S. தங்க மாளிகை எதிரில், G.S.T. மெயின்ரோடு,
கடப்பேரி, மேற்கு தாம்பரம், சென்னை.

நேரம் : காலை 9.30 மணி முதல் மதியம் 1.00 மணி வரை

**வேலூரில்**

ஜனவரி 17 செவ்வாய்க் கிழமை

இடம் : C.S.I பெத்தேல் ஜூபிலி ஜெப அரங்கு,
சாய்நாதபுரம், வேலூர்.

நேரம் : காலை 9.30 மணி முதல் மதியம் 1.00 மணி வரை

## தேவ செய்தி & ஜெபம்

## Rev. Dr. A. ஜாஷ்வா



தொடர்புக்கு : 94888 45627,
80987 42638

Telugu Whats App No: 91770 87860


திருச்சியில்
ஜனவரி
11, 12, 13
புதன், வியாழன், வெள்ளி
அப்போஸ்தல
தீர்க்கதரிசன வல்லமை முகாம்
இடம் : அன்பரின் ஊழிய ஜெபஸ்தலம்
10வது குறுக்குத்தெரு மேற்குவிஸ்தரிப்பு
தில்லைநகர், திருச்சி - 18
நேரம் :
தேவ செய்தி : Dr. ஆனந்த ஸ்திரா
தொடர்புக்கு : 94888 45627 & 82203 17472


மதுரையில்
ஜனவரி 14
திங்கட்கிழமை
அற்புத குடும்ப ஆசீர்வாதக்கூட்டம்
இடம்: அமெரிக்கன் கல்லூரி ஆடிட்டோரியம்,
அமெரிக்கன் கல்லூரிவளாகம்,தல்லாகுளம், மதுரை.
நேரம் : காலை 9.30 மணி முதல் மதியம் 2.00 மணி வரை
தேவ செய்தி
Dr. ஆனந்த ஸ்திரா
Mrs. மார்கிரேட் ஸ்திரா
தொடர்புக்கு : 94888 45627 & 94425 55836


பழையன கழிந்து அனைத்தும் புதிதாக
கிறிஸ்துவுக்குள் ஜெயமுள்ள வாழ்க்கை வாழ தவறாமல் பங்கு கொள்வீர்!
திருச்சி அற்புத குடும்ப ஆசீர்வாதக் கூட்டத்திற்கு வந்து பாருங்கள்!
கர்த்தர் உங்களுக்கு ஒரு அதிசயம் செய்வார்!
திருச்சியில்
அற்புத குடும்ப ஆசீர்வாதக்கூட்டம்
ஜனவரி 28
சனிக்கிழமை
இடம் : அன்பரின் ஊழிய ஜெபஸ்தலம்
10வது குறுக்குத்தெரு மேற்குவிஸ்தரிப்பு தில்லைநகர், திருச்சி – 18
தேவ செய்தி
Dr. ஆனந்த ஸ்திரா மற்றும் குடும்பத்தினர்
நேரம் : காலை 9.00 மணி முதல்
மதியம் 2.00 மணி வரை
தொடர்புக்கு
(0431 - 2741925, 94888 45627, 80987 42638

Regd.with RNI No.:TNTAM/2014/60345, Postal Regd.No.:TRY/092/2022-2024 (with prepayment)
Posted at Trichy RMS on 27th, 28th, 29th of every month; Date of publication 25th or 26th of every month


ஈரோட்டில்

## உங்கள் ஆசீர்வாதத்தின் நாள்




ஜனவரி 7
சனிக்கிழமை

இடம் : CSI பாரிஸ் ஹால்,
டெலிபோன் பவன் அருகில், பிரப்ரோடு,
ஈரோடு.

நேரம் : காலை 9.30 மணி முதல் மதியம் 1.00 மணி வரை

தேவ செய்தி & ஜெபம்

Rev.Dr. A. ஜாஷ்வா
Dr. ஜேன் ஜாஷ்வா

தொடர்புக்கு
94888 45627,
80987 42638

## உங்கள் ஆசீர்வாதத்தின் நாள்

கோயம்புத்தூரில்

இடம் : ஹோட்டல் ஃபார்சூன் (Hotel Fortune)
5-வது மாடி, மீட்டிங் ஹால் A/C (லிப்ட் வசதி உண்டு)
அன்சாரி தெரு, ராம்நகர், கோயம்புத்தூர்

நேரம் : காலை 9.30 மணி முதல் மதியம் 1.00 மணி வரை

ஜனவரி 26
வியாழக்கிழமை (அரசுவிடுமுறை)

தேவ செய்தி & ஜெபம் : Rev.Dr. A. ஜாஷ்வா

தொடர்புக்கு : 94888 45627, 80987 42638

நாகர்கோவிலில்

## புத்தாண்டு சிறப்பு ஆசீர்வாதக் கூட்டம்



இடம்
விஜயுதா திருமண மண்டபம்
W.C.C. ரோடு, நாகர்கோவில்

ஜனவரி 14
சனிக்கிழமை (அரசு விடுமுறை)

நேரம் : காலை 9.30 மணி முதல் 2.00 மணி வரை

தேவ செய்தி
Dr. ஆனந்த ஸ்திரா & Mrs. மார்கிரேட் ஸ்திரா

தொடர்புக்கு : 94888 45627 & 82203 17472

திருவனந்தபுரத்தில்

## அற்புத குடும்ப ஆசீர்வாதக் கூட்டம்

ஜனவரி 26
வியாழக்கிழமை (அரசு விடுமுறை)

இடம் : பஞ்சாயத்து அசோசியேஷன் ஹால்,
வெள்ளையம்பலம், திருவனந்தபுரம் - 33

நேரம் :
காலை 9.30 மணி
முதல் 2.00 மணி வரை

தேவ செய்தி
Dr. ஆனந்த ஸ்திரா & Mrs. மார்கிரேட் ஸ்திரா

தொடர்புக்கு : 94888 45627 & 82203 17472


Published by Dr.Jane Joshua on behalf of ANBARIN OOZHIYAM published from
No.40, Seventhi Pillaiyar Koil Street, Woraiyur, Trichy - 620 003 and printed by Mr. D. Asu Selvaraj
at Angel Printers, 1/459-c, N.G.O. Colony, Satchiyapuram, Sivakasi West - 626 124, South India.
Editor : Dr.Jane Joshua, M.B.A., Ph.D.,

# அன்பரின் ஊழியம்

# ANBARIN OOZHIYAM

மலர்:9 இதழ்:1 ஜனவரி 2023 தனிபிரதி- ரூ.20/- ஆண்டு சந்தா- ரூ.200/-
VOL: 9 ISSUE NO : 1 January 2023 Single Copy - Rs 20/- ANNUAL SUBSCRIPTION: RS 200/-

